30



தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
முன்வைக்கப்பட்ட நாள்
14 மே 1999

மதுரையில் 30-10-1998 அன்று அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. அய்யணன் அம்பலம், இன்னும் இருவர் மரணம் மற்றும் ஒன்பதின்மர் காயமடைந்த சம்பவம் பற்றிய விசாரணை ஆணையம், மதுரை.

திரு. ம. அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட நீதிபதி (ஓய்வு)

அறிக்கை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மதுரையில் 30—10—1998 அன்று அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. அய்யணன் அம்பலம், இன்னும் இருவர் மரணம் மற்றும் ஒன்பதின்மர் காயமடைந்த சம்பவம் பற்றிய விசாரணை ஆணையம், மதுரை.

சட்டமன்றப் LEGISLATIVE ASSEMBLY TAMILNADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

30—10—1998 அன்று மதுரையில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. அய்யணன் அம்பலம், இன்னும் இருவர் மரணம் மற்றும் ஒன்பதின்மர் காயமடைந்த சம்பவம் பற்றிய விசாரணை ஆணையத்தின்

அறிக்கை

நாள் : 05—01—1999.

தலைவர் : திரு. ம. அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.,

மாவட்ட நீதிபதி (ஒய்வு).

I. அமைப்பு :

`30—10—1998 அன்று மதுரையில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. அய்யணன் அம்பலம் மற்றும் இருவர் மரணமடைந்து மேலும் ஒன்பது பேர் காயமடைந்த சம்பவம் ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், அதுபற்றி விசாரிப்பதற்கு ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி ஒருவரைக் கொண்டு ஒரு நீதி விசாரணை நடத்துவது அவசியம் என்றும் தமிழக அரசு கருதியது. அதுபடி மேற்படி சம்பவம் பற்றிய சங்கதிகளையும், அது நடந்த சூழ்நிலைகளையும் விசாரித்து இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை தர வேண்டுமென்று 1952-ம் ஆண்டைய விசாரணை அணையங்கள் சட்டம் (மைய அரசுச் சட்டம் 60 of 1952), பிரிவு 3(1)-ல் கண்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியான திரு. ம. அ. முருகேசன், பி.ஏ., பி.எல்., அவர்களைத் தலைவராகக் கொண்டு 6—11—1998 தேதிய பொதுத்துறை (சட்டம்-ஒழுங்கு) ஆணை என் 1833-ல் தமிழக அரசால் இந்த ஆணையம் அமைக்கப்பட்டது. மேற்படி விசாரணைச் சட்டத்தின் 5-வது பிரிவின் 2, 3, 4 மற்றும் 5 உட் பிரிவுகள் இந்த ஆணையத்துக்குப் பொருந்தும் என்றும் அந்த ஆணை வெளியிடப்பட்டது. அந்த ஆணைக்கினங்க 7—11—1998 அன்று நான் (ம். அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.) ஆணையத்தின் தலைவராகப் பொறுப்பேற்றேன். 10—11—1998 முதல் இந்த ஆணையம் மதுரை பாரதி உலா ரோடு (பந்தயச் சாலை) கதவு எண் 165-டி-ல் செயல் பட்டது.

II. மேற்படி அரசு ஆணையின்படி, இந்த ஆணையத்தின் பணி :

30—10—1998 அன்று மதுரையில், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. அய்யணன் அம்பலமும் இன்னும் இருவரும் மரணமடைந்ததுடன் ஒன்பது நபர்கள் காயமடைந்த சம்பவத்திற்கான காரணம் மற்றும் சூழ்நிலைகள் பற்றி ஆய்வு செய்து இரு மாதங்களுக்குள் அறிக்கை தருவது.

III. ஆணையத்தின் நடவடிக்கைகள் :

இந்த ஆணையம் அமைக்கப்பட்டிருப்பதையும், விசாரணை நடத்தப்படும் சம்பவம் பற்றி அறிந்தவர்களும், தகவல் கொடுக்க விரும்புவர்களும் தங்கள் வாக்குமூலங்களை உறுதி மொழிப் பத்திரங்களுடன் நேரிலோ, அஞ்சல் வழியிலோ இரு வார காலத்தில் இந்த ஆணையத்தின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அலுவலக நேரங்களில் சேர்ப்பிக்கலாம் என்பதையும் சொல்லி 12—11—1998, 14—11—1998 தேதியிட்ட ''தினத்தந்தி'' நாளேட்டிலும், 13—11—1998 மற்றும் 15—11—1998 தேதியிட்ட ''தினமணி'' நாளேட்டிலும், 13—11—1998-ம் தேதிய ''இந்து'' நாளேட்டிலும் அறிக்கைகள் வெளியிடப்பட்டன. 16—11—1998 அன்று காலையில் சம்பவ இடம் பார்வையிடப்பட்டது. 19—11—1998 அன்று Assistant Public Prosecutor, Grade I, திரு. பொன் பீட்டர் அமல்தாஸ் காவல்துறை வழக்கறிஞராக நியமிக்கப்பட்டார் (Vide proceedings of the Inspector-General of Police and Director of Prosecution, Chennai No. 9403/D/P/A3/98, dated, 19—11—1998). 11—11—1998 அன்று செல்வி எஸ். பாலசுந்தரி, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆணையத்தின் வழக்கறிஞராக நியமிக்கப்பட்டார் [Vide Government Letter No. 5341/98—4, Public (Law and Order), dated 11—11—1998]. காவல்துறை சார்பில் ஆய்வாளர்கள் திரு. வீரணன், திரு. சந்திர சேகரன் மற்றும் லாரி உரிமையாளர்கள் மோகன்ராஜன், மாதவன் மற்றும் கட்டிட ஒப்பந்தக்காரர்

கிருஷ்ணமூர்த்தி, லாரி ஓட்டுநர் சுப்பிரமணியன், லோடுமேன் கணேசன், இன்னொரு ரமணன் ஆகியவர்கள் உறுதிமொழி வாக்குமூலங்கள் (மொத்தம் 8) தாக்கல் செய்தனர். சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் தனது வழக்கறிஞர்கள் திருவாளர்கள் சுரேந்திரன், அனந்தபத்மநாபன், கதிரவன் மற்றும் இளையராஜா ஆகியவர்கள் மூலமாக ஒரு உறுதிமொழி வாக்குமூலம் தாக்கல் செய்தார். வழக்கறிஞர் திரு. அனந்தபத்மநாபன் மூலமாக திருவாளர்கள் செங்கசாமி நாயுடு, யானைமலை ஆகியவர்கள் 2 உறுதிமொழி வாக்குமூலங்கள் தாக்கல் செய்தனர். திரு. கதிரவன் மூலமாக திருவாளர்கள் அமாவாசை, கே. முத்துராமலிங்கம் ஆகியவர்கள் 2 உறுதிமொழி வாக்குமூலங்கள் தாக்கல் செய்தனர். இவை தவிர திருவாளர்கள் சி. முத்துராமலிங்கம், சேவுகன், ராஜு ஆண்டித்தேவர், குண்டுமலை, சிங்கராஜ், பொன் ராஜரத்தினம், கர்னன் ஆகிய 7 பேர்கள் தாங்களாகவே உறுதிமொழி வாக்குமூலங்களைத் தாக்கல் செய்தனர் (ஆக மொத்தம் 12). இவர்கள் எல்லோருமே விபத்துக்குள்ளான அம்பாசிடர் கார்களில் விபத்தின்போது பயணம் செய்து, விபத்தின்போது காயம்பட்டவர்கள். வளையாபதி, சிங்கராஜ் ஆகியவர்கள் விபத்துக்குள்ளான இரண்டு அம்பாசிடர் கார்களை விபத்தின்போது ஓட்டியவர்கள். திரு. அய்யணன் அம்பலம் பயணம் செய்த காரை ஓட்டி வந்த திரு. வளையாபதி வாக்குமூலம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. சாட்சிகளின் விசாரணையின்போது உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. வல்லரசு அவர்கள் தனியாக ஒரு வாக்குமூலம் தாக்கல் செய்தார்.

IV. சாட்சிகளின் விசாரணை :

3—12—1998 முதல் 31—12—1998 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். காவல் துறை சார்பில் 8 சாட்சிகள் (பி.டபிள்யு. 1—8) விசாரிக்கப்பட்டு அவர்கள் மூலமாக சான்றாவணம் ஏ1 முதல் ஏ34 வரை குறியிடப்பட்டன. இவை தவிர திரு. மாதவன் என்பவரின் வாக்குமூலம் சா.ஆ.ஏ. 35 ஆகக் குறியிடப்பட்டது. இதற்கு எதிராக ஆர்.டபிள்யு. 1—5 வரை விசாரிக்கப்பட்டனர். அவர்கள் மூலமாக சான்றாவணம் பி1 முதல் பி6 வரை குறியிடப்பட்டன. இவை தவிர அவர்கள் தரப்பில் 9 வாக்குமூலங்கள் சா.ஆ.பி.7—15 வரை குறியிடப்பட்டன. ஆணையத்தின் சாட்சியமாக சா.ஆ.சி 1 முதல் சி 27 குறியிடப்பட்டன. 6 நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அவர்களில் மதுரை அரசினர் ராஜாஜி மருத்துவமனை டீன் தேவையான ஆவணங்களை (சா.ஆ.சி 3 முதல் சி 14) அனுப்பி வைத்திருந்தார். இன்னொரு சாட்சி ''நெற்றிக்கண்'' ஆசிரியர் விசாரணைக்கு வரவில்லை. மறுமொழியும் அனுப்பவில்லை. இன்னொரு சாட்சி மேற்கு வங்க பாராளுமன்ற உறுப்பினர் திரு. தேப பிரதா பிஸ்வாஸ். அவரிடம் இருந்து ஆணையத்திற்கு எந்தத் தகவலும் இல்லை. இன்னொரு சாட்சி திரு. வளையாபதி காவல்துறையினர் சார்பில் பி.டபிள்யு.8 ஆக விசாரிக்கப்பட்டுவிட்டார். கடைசியாக காவல் துறை குற்றப் பிரிவு உதவி ஆணையர் அவர்கள் ஆணையத்தின் ஒரே சாட்சியாக(சி.டபிள்யு.1) ஆக விசாரிக்கப்பட்டார். ஆக மொத்தம் 14 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 77 ஆவணங்கள் குறியிடப்பட்டன. 31—12—1998 அன்று சாட்சிகளின் விசாரணை முடிந்தவுடன், இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. சாட்சிகள் விசாரணைக்காக ஆணையம் 13 நாட்கள் அமர்ந்தது.

V. சாட்சியங்களின் விபரம் :

(1) மதுரை பாலகிங்காபுரத்தைச் சேர்ந்த மோகன்ராஜன் (கா.சா. 3) என்பவரும் மதுரை சி.எம். ஆர். ரோட்டில் வசிக்கும் மாதவன் என்பவரும் சேர்ந்து ''அஜந்தா'' டி.என். 59ஒய் 4176 என்ற (அரைபாடி) மணல் லாரி ஒன்று வைத்திருக்கிறார்கள். அது மாதவன் பெயரில் பதிவாகியுள்ளது. வைகை ஆற்றில் முத்தனேந்தல் பகுதியில் மணல் வாரிக்கொண்டு வந்து தேவையானவர்களுக்கு விற்று வருகிறார்கள். அவர்களுக்குச் சொந்தமாக மணல் குவாரி கிடையாது. எனவே, முத்தனேந்தல் கிராமத்தில் ''மலர்மங்கை'' என்ற இடத்தில் குத்தகைதாரர் ராமசாமியிடம் பணம் கொடுத்து அனுமதிச் சீட்டு வாங்கி மணல் அள்ளி விற்று வருகிறார்கள். சுப்பிரமணியன் (கா.சா. 4), சந்திரன் என்பவர்கள் அந்த லாரியை ஒரு நாள் விட்டு ஒரு நாள் மாற்றி மாற்றி ஓட்டி வருகிறார்கள். கணேசன் (கா.சா.5) மற்றும் இருவர் கூலியாட்களாக (லோடுமேன்கள்) மணல் ஏற்றி வருகிறார்கள். மோகன்ராஜன் வீட்டில் தொலைபேசி எண் 732060 இருக்கிறது. மணல் அடிக்கும் நேரம் தவிர, மற்ற நேரங்களில் லாரியை ஜாவதநல்லூரில் இந்திராகாந்தி சிலை அருகே நிறுத்தி வைத்திருக்கிறார்கள். சிதம்பரம் என்பவரின் ''நியூ கண்ணன்'' டீக்கடை இருக்கிறது. அங்கு தொலைபேசி எண் 630054 இருக்கிறது. மணல் வேண்டுமென்று யாராவது கேட்டால், மோகன்ராஜன் அந்தத் தொலைபேசியில் லாரி டிரைவரைக் கூப்பிட்டு அந்த இடத்துக்கு மணல் கொண்டு போய்க் கொட்டும்படி சொல்லுவார். அதுபடி லாரி டிரைவர் செய்வார். அந்த வசதிக்காகத்தான் லாரியை அங்கே நிறுத்தி வைத்து வருகிறார்கள். குவாரியிலிருந்து மணல் எடுத்து வந்து அந்த டீக்கடைக்கு அருகில் கொட்டி வைத்துக் கொள்வது அவர்கள் வழக்கம்.

(2) 29—10—1998 அன்று காலை சுப்பிரமணியன் (கா.சா. 4) மோகன்ராஜனிடம் பணம் வாங்கிப் போய், குவாரி சொந்தக்காரரிடம் கொடுத்து கா.சா. எ. 27 என்ற அனுமதிச் சீட்டைப் பெற்று, ''மலர்மங்கை'' என்ற குவாரியில், கணேசன் (கா.சா. 5) மற்றும் இருவர் உதவியுடன் இரண்டு லோடு மணல் அள்ளி வந்து, வழக்கமாக நிறுத்தும் டீக்கடை அருகில் ஒரு லோடு மணலை மட்டும் கொட்டிவிட்டு சுப்பிரமணியனும் கணேசனும் லாரியுடன்

அங்கேயே இருந்தார்கள். இரவு 9.30 மணி அளவில், கட்டிட ஒப்பந்த வேலை செய்யும் கிருஷ்ணமூர்த்தி (கா.சா. 6) என்பவர் மதுரை பச்சரிசிக்காரத் தோப்பில் உள்ள தன் மைத்துனர் ஹரி ஹரன் வீட்டில் மாமத்து வேலை செய்ய ஒரு லோடு மணல் கொண்டுபோய்க் கொட்டும்படி மோகன்ராஜனின் வீட்டிற்குத் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்துவிட்டு, இரவு 12 முதல் 1 மணியளவில் மணல் வரும் என்று எதிர்பார்த்து ஹரிஹரன் வீட்டுக்குப் போய்க் காத்திருந்தார். மோகன்ராஜனின் வீட்டிலிருந்து அந்தத் தகவல் ஜாவத நல்லூரில் லாரி யுடனிருந்த ஒட்டுநர் சுப்பிரமணியனுக்கு டீக்கடை தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் சுப்பிரமணியனும் கணேசனும் பச்சரிசிக்காரத் தோப்பில் உள்ள ஹரிஹரன் வீட்டுக்கு, லாரியில் மாணலைக் கொண்டுபோய் இரவு 1 மணி அளவில் கொட்டிவிட்டுக் காலி லாரியை, ஜாவதநல்லூர் கொண்டுபோய் நிறுத்த காமராஜர் சாலை வழியாக மேற் கிலிருந்து கிழக்காக சுப்பிரமணியன் ஓட்டிக் கொண்டு போனார்.

(3) இதற்கிடையில், பசும்பொன் திரு. முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி விழாவில் கலந்து கொள்ள, 29—10—1998 அன்று மாலை 4.00 மணியளவில், மதுரை காலேஜ் ஹவுசிலிருந்து அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. அய்யனன் அம்பலம் தலைமையில் கட்சிப் பிரமுகர்கள் 4 அம்பாசிடர் கார்களில் புறப்பட்டுப் போனார்கள். தான் வழக்கமாகப் பயணம் செய்யும் டி.என். 59 இ 2122 என்ற காரில், வழக்கமாக அதை ஓட்டிவரும் திரு. வளையாபதி (கா.சா. 8) அதை ஓட்டிவர, திரு. அய்யனன் அம்பலம் அதில் மற்றவர் களுடன் பயணம் செய்தார். அவர்களுடைய கார்களைத் தொடர்ந்து இன்னும் பல கார்களும், வேன்களும், ஜீப்களும் தொடர்ந்து சென்றன. வழியில் திருப்பரங்குன்றம் சேர்த்து ஆகிய இடங்களில் கொடி ஏற்றிவிட்டு, கமுதிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். வழியில் ஆங்காங்கு காவல் துறையினர் அவர்களுடைய கார்களை நிறுத்தி, சோதித்துவிட்டு அனுப்பி வைத்தார்கள். கமுதி யில், தேவர் சிலைக்கு மாலைகள் அணிவித்துவிட்டு, இரவு உணவு அருந்திவிட்டு, இரவு 9.00 மணியளவில் பசும்பொன் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு தேவர் சமாதியில் அஞ்சலி செலுத்தி விட்டு, அங்கு நடைபெற்ற பெரிய பொதுக்கூட்டத்தில் திரு. அய்யனன் அம்பலமும் மற்றவர் களும் பேசினார்கள். கூட்டம் முடிந்து இரவு சுமார் 10.30 மணியளவில், பசும்பொன்னை விட்டு, 4 கார்களில் தலைவர்கள் மதுரைக்குத் திரும்பினார்கள். புறப்படும்போது காவல் துறையினர் தலைவருடன் பேசி, போகும் வழியைத் தெரிந்து கொண்டு அனுப்பி வைத்தார்கள். தலைவர்கள் அபிராமம், மானாமதுரை வழியாக மதுரை திரும்பினர். குண்டுமல (ஆர்.டபிள்யு.2) என்பவர் ஓட்டி வந்த டாக்சி டி.சி.யு. 3663 என்ற அம்பாசிடர் கார் முதலாவ தாகவும், டி.என். 37 B 6545 என்ற கார் இரண்டாவதாகவும், டி.என். 59 இ 2122 என்ற அம்பாசிடர் கார் மூன்றாவதாகவும் வந்தன. அதன் பின் வந்த ஐந்தாவது காரில் யானைமலை (ஆர்.டபிள்யு.3) என்பவர் பயணம் செய்ததாகச் சொல்லுகிறார். முதலாவதாகப் போன டி.சி.யு. 3663 என்ற டாக்சியில், கானன (ஆர்.டபிள்யு. 1) என்பவரும் மற்றவர்களும் பயணம் செய்தனர்.

(4) மதுரை காமராஜர் சாலையில் கிழக்கே இருந்து மேற்காக வந்த இந்த கார்கள் வரிசையாக வந்தபோது, மேற்கே இருந்து கிழக்காக டி.என். 59 ஒய் 4176 ''அஜந்தா'' என்ற அரை பாடி லாரி ''ஜெயலட்சுமி ஆட்ஸ்'' கடை முன்பு, முதலாவதாக வந்த கார் டி.சி.யு. 3663 மீது மோதப் பார்த்தது. அந்தக் காரை ஓட்டிவந்த குண்டுமலை (ஆர்.டபிள்யு.2) தனது காரை இடது பக்கமாக ஒதுக்கி ''தினகரன்'' அலுவலக வாசலில் நிறுத்தினார். அவருக்குப் பின்னால் வந்த, இரண்டாவது, மூன்றாவது கார்களின் மீது அந்த லாரி மோதி விட்டு சற்று தூரம் போய் வடக்கு நோக்கி நின்றுவிட்டது. காரில் மோதியவுடன், லாரியில் பயணம் செய்த டூலோமேன் கணேசன் (கா.சா. 5) கீழே விழுந்து விட்டார். சிறு காயம் அடைந்த அவர் சிகிச்சை பெறாது விட்டிற்கு சென்று விட்டார். டிரைவர் சுப்பிரமணியன் (கா.சா. 4) இஞ்சினைக் கூட நிறுத்தாமல் இறங்கி விபத்து பற்றிச் செல்ல திடீர் நகர் காவல் நிலையம் சென்றார்; உள்ளே போகப் பயந்து, லாரி சொந்தக்காரர் மோகன்ராஜன் (கா.சா.3) வீட்டிற்குப் போய் விபத்து பற்றிச் சொன்னார். விபத்து நடந்த இடத்திற்கு அருகில் போய் இருக்கும்படி மோகன்ராஜன் (கா.சா. 3) சொன்னதின் பேரில் சுப்பிரமணியன் (கா.சா. 4) விபத்து நடந்த இடத்துக்கருகில் போய் இருந்தார். அவருடைய மைத்துனர் நேருவும், லாரி சொந்தக்காரர் மகன் குமாரும் அவரைத் தெப்பக்குளம் காவல் நிலையத்திற்கு அழைத்துப்போய் உட்கார வைத்தார்கள். விபத்தில் டி.என். 37பி 6545, டி.என். 59 இ 2122, டி.என். 60 7747 கார்கள் சேதமடைந்தன. டி.என். 37பி 6545 காரில் பயணம் செய்த உசிலைராஜனும், டி.என். 59 இ 2122-ல் பயணம் செய்த திரு. அய்யனன் அம்பலமும், முத்துராமலிங்கமும் விபத்திற்குப் பிறகு மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சேர்த்தவுடன் இறந்துவிட்டார்கள். உடன் பயணம் செய்த ராஜு ஆண்டித்தேவர், சேவுகன், ரெங்கசாமி நாடு, ஜீவானந்தம், சந்தமூர்த்தி ஆகியோர்கள் அரசு ராஜாஜி மருத்துவமனையிலும், திரு. சந்தானம், திரு. பிஸ்வாஸ், டிரைவர் வளையாபதி ஆகியோர்கள் மீனாட்சி மிஷன் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றார்கள்.

(5) அன்று இரவு ரோந்துப் பணியில் இருந்த மதுரை நகர் குற்றப் பிரிவு உதவி ஆணை யருக்கு (சி.டபிள்யு.1) விபத்துப் பற்றிக் கட்டுப்பாட்டு அறையிலிருந்து தகவல் தெரிவிக்கப் பட்டது. அவர் மதுரை நகர் போக்குவரத்துத் துறை காவல் நிலையத்திற்கும், மதுரை நகர் குற்றப்பிரிவு பி1 விளக்குத் தூண் காவல் நிலையத்திற்கும் பொறுப்பு வகிக்கும் காவல்

ஆய்வாளரான திரு. எம். சி. வீரனன் (கா.சா. 1) என்பவருக்குத் தகவல் தெரிவித்தார். காவல் ஆய்வாளர் திரு. வீரனன் (கா.சா. 1) மதுரை அரசு மருத்துவமனைக்குப் போய், அங்கு சிகிச்சையிலிருந்த சிங்காரஜனிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்று அதை கு.எண். 81/98 ஆக, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 297, 337 மற்றும் 304(ஏ) பிரிவுகளில் பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் நகல்களை (சா.ஆ.ஏ.1) உயர் அதிகாரிகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்து விட்டு, விபத்து நடந்த இடத்திற்குப் போய் பார்வையிட்டு, பார்வை அறிக்கை(சா.ஆ.ஏ.2) மற்றும் (சா.ஆ.ஏ.3) தயார் செய்தார். விபத்து நடந்த இடத்தில் கிடந்த கண்ணாடி துண்டுகளை அத்தாட்சியின் (சா.ஆ.ஏ. 4) கீழ்க் கையப்பற்றினார். பின்பு, அரசு மருத்துவமனைக்கு வந்து சவக் கிடங்கில் இருந்த திரு. அய்யனன் அம்பலத்தின் சவத்தின் மீது விசாரணை நடத்தி சவ விசாரணை அறிக்கை (சா.ஆ.ஏ. 7)யும், உசிலைராஜனின் சவத்தை வைத்து விசாரணை நடத்தி சவ விசாரணை அறிக்கை (சா.ஆ.ஏ. 5)யும், முத்துராமலிங்கத்தின் சவத்தை வைத்து சவ விசாரணை நடத்தி சவ விசாரணை அறிக்கை (சா.ஆ.ஏ.6)யும், தயாரித்தார். பிறகு 3 சவங்களையும் சவ ஆய்வுக்கு அனுப்பி, அந்த ஆய்வுகளுக்குப் பிறகு சவங்களை உறவினர்களிடம் ஒப்படைத்தார். பிறகு அந்த மருத்துவமனையில் உள்நோயாளிகளாகச் சிகிச்சை பெற்று வந்த திரு. சிங்காரஜ், ஆண்டித்தேவர், சேவுகன், ரெங்கசாமி நாயுடு, ஜீவானந்தம், சாந்தமூர்த்தி ஆகியோர்களை விசாரித்து அவர்களுடைய வாக்குமூலங்களைப் பதிவு செய்தார். அங்கிருந்து மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்குப் போய் அங்கு சிகிச்சையில் இருந்த சட்ட மன்ற உறுப்பினர் திரு. சந்தானம், பாராளுமன்ற உறுப்பினர் திரு. பிஸ்வாஸ், ஒட்டுநர் திரு. வளையாபதி (கா.சா. 8) ஆகியவர்களை விசாரித்து அவர்களுடைய வாக்குமூலங்களைப் பதிவு செய்தார். திரும்பவும், அரசு மருத்துவமனை வந்து உசிலைராஜனின் மனைவி திருமதி. பஞ்சம்மாள், ராஜா, குருசாமி, ஐயப்பன் ஆகியோர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவுசெய்தார். மீண்டும், சம்பவ இடத்திற்குப் போய்ப் பார்த்துவிட்டு, தெப்பக்குளம் காவல் நிலையத்தில் நிறுத்தியிருந்த வாகனங்களில், டி.என். 59 இ 2122 என்ற காரில் இருந்த ரத்தம் பட்ட மற்றும் ரத்தம் படாத துண்டுகளையும், டி.என். 59 ஒய் 4176 என்ற லாரியில் இருந்து டிரிப்ஷீட்டையும் அத்தாட்சி மகஜர் (கா.சா.ஆ.ஏ. 8)-ன் கீழ்க் கைப்பற்றி நீதிமன்றத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார்.

(6) லாரி ஓட்டுநர் சுப்பிரமணியத்தை (கா.சா. 4) சம்பவ இடத்திற்கும், பிறகு அவனியாபுரத்திற்கும் கூட்டிப்போய் அவர்தான் விபத்தின்போது லாரியை ஓட்டினார் என்பதை உறுதி செய்து, மாலை 4.00 மணிக்கு கைது செய்து மாலை 5.00 மணிக்கு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தார். (சா.ஆ.சி.23,24,25 பார்க்கவும்). தொடர்ந்து 31–10–1998 அன்று விபத்து நடந்த இடத்திற்கு அருகில் கடை வைத்திருப்பவர்கள் பலரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். 2–11–1998 அன்று வாகன ஆய்வாளர் வாகன ஆய்வறிக்கை (சா.ஆ.ஏ. 9, ஏ.10) கொடுத்தார். 3–11–1998 அன்று அரசு மருத்துவமனை சென்று திரு. அய்யனன் அம்பலத்தின் சவ ஆய்வு அறிக்கை (சா.ஆ.ஏ. 11), முத்துராமலிங்கத்தின் சவ ஆய்வு அறிக்கை (சா.ஆ.ஏ.12) மற்றும் உசிலைராஜனின் சவ ஆய்வு அறிக்கை (சா.ஆ.ஏ. 13) ஆகியவற்றை வாங்கினார். (தனது புலன் விசாரணையில், இது தற்செயலாக நடந்த விபத்து என்று கண்டதாக இந்த ஆணையத்தின் முன்பு காவல் சான்றாவணம் ஏ.14 என்ற உறுதிமொழி வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறார்.)

(7) விபத்தில் இறந்து போனவர்களில் ஒருவரான திரு. அய்யனன் அம்பலம் அவர்கள் அகில இந்திய பார்வர்டு ப்ளாக் கட்சியின் தலைவர் என்பதால், விபத்தை விசாரிக்கத் தனி புலன் விசாரணைப் படை அமைக்கப்பட்டு, காவல் ஆய்வாளர் திரு. சந்திரசேகர் (கா.சா. 2) அவர்கள் தலைமையில் தொடர்ந்து புலன் விசாரணை செய்யப்பட்டது. அவர் லாரியின் உரிமையாளர்களான மோகன்ராஜன், மாதவன் ஆகியோரையும்; மோகன்ராஜன் மனைவி ரமிலா, மகன் குமரன், டீக்கடையில் வேலை பார்க்கும் பாண்டி, லோடுமேன் கணேசன் (கா.சா. 5) ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்; குமாஸ்தாவிடம் இருந்து நடைச் சீட்டு (சா.ஆ.ஏ. 27) கைப்பற்றினார்; விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்யும் பொருட்டு, விஞ்ஞான ஆய்வாளருக்கும், வாகனங்களையும் படம் எடுக்கும் வேண்டுகோள்கள் அனுப்பினார்; சம்பவ இடத்தையும், வாகனங்களையும் படம் எடுக்கும் புகைப்பட நிபுணருக்கும் வேண்டுகோள் விடுத்தார்; தெப்பக்குளம் காவல் நிலையத்தில் இருந்து விபத்துக்குள்ளான வாகனங்களை (டி.என். 59இ 2122, டி.என். 60 7747 மற்றும் டி.என். 59 ஒய். 4176) பார்த்துக் குறிப்பெடுத்துக் கொண்டார்; இன்னொரு வாகனமான டி.என். 37 பி 6545 என்ற கார் ஏற்கனவே சொந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது; 6–11–1998 அன்று மீனாட்சி மிஷன் மருத்துவமனை சென்று வளையாபதி (கா.சா. 8) ராஜு ஆண்டித் தேவர், சேவுகன், ரெங்கசாமி நாயுடு ஆகியோர்களை விசாரணை செய்தார்; சம்பவ இடத்தில் அலங்கார வளைவுகளை அமைத்திருந்த போஸ், ராஜா என்பவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்; 7–11–1998 அன்று லாரி டிரைவர் சுப்பிரமணியத்தை (கா.சா. 4) விசாரித்து அவர் வாக்குமூலத்தைப் (சா.ஆ.ஏ. 16) பதிவு செய்தார்; கட்டிடக் காண்ட்ராக்டர் கிருஷ்ணமூர்த்தி (கா.சா. 6)-யை விசாரித்து விபத்தை உண்டாக்கிய லாரியை சுப்பிரமணியன் தான் ஓட்டி வந்தார் என்று ஊர்ஜிதம் செய்து கொண்டார். அன்றே ஹரி ஹரன், ரமணன் (கா.சா. 7) ஆகியோர்களை விசாரித்து அவர்கள் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார்; 8–11–1998 அன்று, விபத்து நடந்த இடத்திற்கு 29–10–1998 அன்று பாரா பொறுப்பில் இருந்த ஆய்வாளர்கள் திரு. சுப்பையா, மாரிராஜன், தலைமைக் காவலர் அழகர் சாமி ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்; 9–11–1998, 10–11–1998, 13–11–1998 நாள்களில் விபத்தின்போது கார்களை ஓட்டியவர்களையும், அதில் பயணம்

செய்தவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்; விஞ்ஞான ஆய்வாளர் அறிக்கை (சா.ஆ.ஏ. 17), வரைபடம் (சா.ஆ.ஏ. 18), கைரேகை நிபுணரின் அறிக்கை (சா.ஆ.ஏ. 19), ஓட்டுநர் சுப்பிரமணியனின் கண்களைச் சோதித்த கண் மருத்துவரின் சான்றிதழ் (சா.ஆ.ஏ.20), திரு. பில்வாஸ் அவர்களின் காயச் சான்றிதழ் (சா.ஆ.ஏ. 21), திரு. சந்தானம் அவர்களின் காயச் சான்றிதழ் (சா.ஆ.ஏ. 22), வளையாபதி (கா.சா. 8)யின் காயச் சான்றிதழ் (சா.ஆ.ஏ.23) மற்றும் விபத்துக்குள்ளான வாகனங்களின் புகைப்படங்கள் (சா.ஆ.ஏ. 24) ஆகியவற்றைப் பெற்றார்; லாரியின் டயர் மற்றும் பிரேக்கின் நிலைகளைக் கண்டறிய வாகன ஆய்வாளரிடம் வேண்டுகோள் விடுத்ததின்பேரில், அவர் 23-11-1998 அன்று அறிக்கை (சா.ஆ.ஏ. 26) கொடுத்தார்; தனது புலன் விசாரணையிலும் மறைமுகமான ரகசிய விசாரணையிலும், இது தற்செயலாக நடந்த ஒரு விபத்து தான் என்றும் சதி ஏதுமில்லை என்றும் கண்டார்; அதை உறுதி செய்து (சா.ஆ.ஏ. 25) என்ற உறுதி மொழி வாக்குமூலத்தை இந்த ஆணையத்தின் முன் தாக்கல் செய்திருக்கிறார்; யார் யார் எந்தெந்த காரில் பயணம் செய்தார்கள், யார் யார் எந்தெந்த கார்களை ஓட்டி வந்தனர் என்பதையும் வரை படத்தில் (சா.ஆ.ஏ. 24) காட்டி யிருக்கிறார்.

(8) திரு. அய்யனன் அம்பலம் அவர்களும் இன்னும் இருவரும் இறந்த அந்த நிகழ்ச்சி ஒரு விபத்து அல்ல, ஒரு சதியின் விளைவு என்று எதிர் தரப்பில் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஆதாரமாக சில (சா.ஆ.பி.1, பி2, பி3, பி6) உறுதிமொழி வாக்குமூலங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அதையொட்டி ஆர்.டபிள்யூ. 1, 2, 3, 4, 5 சாட்சியம் அளித்து இருக்கிறார்கள். இந்த வாக்குமூலங்கள் எல்லாமே ஒரே மாதிரியாக இருக்கின்றன. அவை களில் பொதுவாக ஏதோ சதி இருக்கிறது என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. சதி என்று அவர்கள் சொல்லுவதற்குக் காரணம்—(1) எதிரே வந்த லாரி முதல் காரைத் தவிர்த்து விட்டு, தலைவர்கள் வந்த 2, 3 கார்களைக் குறி வைத்து தாக்கி இருக்கிறது, (2) அந்த லாரியை வேறு ஒருவர் ஓட்டி வந்து இருக்கிறார், காவல் துறை தரப்பில் சொல்வது போல சுப்பிரமணியன் அதை ஓட்டவில்லை, (3) மேலும் விபத்துக்கு முன்பாக ஒரு குறிப்பிட்ட வகுப் பினரும் அவர்களின் தலைவரும் தேவரின் விழாவைத் தாக்கிப் பேசி வந்தார் என்பதும். ஆனால் விசாரணையின் போது, புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமியின் மீது தான் சந்தேகம் இருப்பதாகச் சொன்னார்கள். இந்த சந்தேகத்தை அவர்கள் தங்கள் வாக்குமூலங்களில் சொல்லவில்லை. விசாரணையின் போது கடைசியாக சாட்சியம் அளிக்க வந்த திரு. வல்லரசு அவர்கள் மிகத் தாமதமாக தாக்கல் செய்த தன்னுடைய வாக்குமூலத்தில் (சா.ஆ.பி. 6) சில காரணங்களைச் சொல்லி இருக்கிறார். தன்னுடைய சாட்சியத்தில் அதை விளக்கும் வகையில் வேறு சில தகவல்களையும் சொல்லியிருக்கிறார்.

VI. சாட்சியங்களின் வன்மை, மென்மை ஆய்வு :

(1) 30-10-1998 அன்று அதிகாலை 00.45 மணி அளவில், மதுரை நகர் காமராஜர் சாலையில் ''தினகரன்'' நாளேடு அலுவலகத்திற்கு அருகில், ''ஜெயலட்சுமி ஆர்ட்ஸ்'' என்ற கடை முன்பு, அஜந்தா டி.என். 59 ஒய். 4176 என்ற அரசாங்க மனல் லாரி மேற்கே இருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது, எதிரே கிழக்கே இருந்து மேற்கு நோக்கி ஒன்றன்பின் ஒன்றாக வரிசையில் வந்த நான்கு அம்பாசிடர் கார்களில் (டிபி. 3663, டின். 37பி 6545, டின். 59 இ 2122, டின். 60 7747) 2, 3, 4-வதாக வந்த டின். 37பி 6545, டின். 59இ 2122, டின்.60 7747 என்ற கார்களின் மீது மோதி ஒரு பெரிய விபத்து ஏற்பட்டது என்பதை மேலே விவரித்த சாட்சியம் காட்டுகிறது. இதை யாரும் மறுப்பதில்லை. விபத்தின்போது, டின். 37பி 6545 என்ற காரில் மேற்குவங்க பாராளுமன்ற உறுப்பினரும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் செயலாளருமான திரு. தேபபிரத மிஸ்வாஸ், சோழ வந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சந்தானம், திரு. ஜெயானந்தம், உசிலைராஜன் ஆகியோர் பயணம் செய்தனர். திரு. சிக்காரஜன் அந்தக் காரை ஓட்டி வந்தார். அவர்கள் எல்லோருமே காயமடைந்து சிகிச்சை பெற்றனர். அவர்களில் திரு. உசிலைராஜன் மரண மடைந்தார் (சவ அறிக்கை சா.ஆ.ஏ. 13 பார்க்க). அந்தக் காரும் சேதமடைந்தது (பார்க்க சா.ஆ.ஏ. 10, ஏ17). அடுத்து வந்த டின். 59இ 2122 என்ற காரில் திருவாளர்கள் அய்யனன் அம்பலம், முத்துராமலிங்கம், சேவுகன், ராஜு ஆண்டித்தேவர், ரங்கசாமிநாயடு, சாந்தமூர்த்தி ஆகியவர்கள் பயணம் செய்தனர். திரு. வளையாபதி (கா.சா. 8) அதை ஓட்டி வந்தார். அவர்கள் அனைவருமே விபத்தில் காயமடைந்தனர். அவர்களில் திரு. அய்யனன் அம்பலமும், திரு. முத்துராமலிங்கமும் காயங்களின் விளைவாக அன்றே மரணம் அடைந்தனர் (சா.ஆ.ஏ. 11, ஏ12 என்ற சவ ஆய்வு அறிக்கைகளைப் பார்க்கவும்). அந்தக் காரும் மிகுந்த சேதமடைந்தது (சா.ஆ.ஏ. 10, ஏ17). கடைசியாக வந்த டின்.60 7747 என்ற காரை திரு. ராஜு என்பவர் ஓட்டி வந்தார். நவகோடி, அய்யப்பன், வீரனன், மூவேந்தன், ஒய்யாத்தேவர் ஆகியவர்கள் அதில் பயணம் செய்தனர். அவர்கள் யாரும் விபத்தில் காய மடையவில்லை. ஆனால், அந்தக் கார் சேதமடைந்தது (பார்க்க சா.ஆ.ஏ. 9, ஏ17). விபத்துக்குள்ளான லாரி டி.என். 59 ஒய் 4176-ம் சேதமடைந்தது (சா.ஆ.ஏ. 9, ஏ17). அதன் பிரேக் 68 சதவீதம் இருந்தது. டயரும் அசலாக நல்ல நிலையில் இருந்தது (பார்க்க சா.ஆ.ஏ. 26). இந்த சங்கதிகளைப் பற்றியும் மறுப்பேதுமில்லை. எல்லாத் தரப்பினர்களும் இவைகளை ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆனால், விபத்துக்கான காரணங்கள் பற்றியும், விபத்தின் போது லாரியை ஓட்டியவர் யார் என்பது பற்றியும் ஐயங்கள் எழுப்பப்படுகின்றன.

(அவைகளைப் பற்றிப் பிறகு விவாதிக்கிறேன்) புலன் விசாரணையின் போது, விபத்தில் காயமடைந்தவர்களுக்கான காயச் சான்றிதழ்களும், இறந்து போனவர்களின் சவ ஆய்வு அறிக்கைகளும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. அவைகள் காயமடைந்தவர்களின் காயங்களையும், இறந்து போனவர்கள் காயங்கள் விளைவினால்தான் இறந்தார்கள் என்பதையும் காட்டுகின்றன. அந்த விவரங்களைப் பற்றியும் மறுப்பேதுமில்லை. எனவே அவைகள் இப்பொழுது இரண்டாம் பட்சம்தான். விபத்தை ''அஜந்தா'' டிஎன்.59 ஒய் 4176 என்ற லாரிதான் ஏற்படுத்தியது என்பதைக் காண ஆய்ஞான ஆய்வெல்லாம் செய்யப்படுக்கிறது. அதுவும் இப்போழுது தேவையற்றது. ஏனென்றால், அந்த லாரிதான் விபத்தை ஏற்படுத்தியது என்பதை யாருமே மறுப்பதில்லை. அது விபத்து நடந்த இடத்திலிருந்தே எடுத்துப் போகப்பட்டிருக்கிறது.

(2) விபத்தின்போது அஜந்தா டி.என்.59 ஒய். 4176 என்ற லாரியை காவல் துறை 4-வது சாட்சியான சுப்பிரமணியன்தான் வேகமாகவும் கவனக் குறைவாகவும் ஓட்டி வந்து எதிரே வந்த கார்களின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்பது காவல் துறை யினரின் கண்டுபிடிப்பு. இதை காவல் துறை 1, 2 சாட்சிகளான ஆய்வாளர்கள் விளக்கியிருக்கிறார்கள். விபத்திற்கு முன் அந்த லாரியில் மணல் ஏற்றி வந்து பச்சரிக்காரத் தோப்பில் ஹரிஹரன் வீட்டில் கொட்டிவிட்டு திரும்பி வரும்போது விபத்து ஏற்பட்டது என்று லாரி ஓட்டுநர் சுப்பிரமணியனும் (கா.சா. 4) லோடுமேனாக வந்தகணேசனும் (கா.சா.5) உறுதி செய்கிறார்கள். அன்று இரவு மணல் வேண்டுமென்று லாரியின் சொந்தக்காரரான மோகன்ராஜுக்கு தகவல் கொடுத்து விட்டு லாரியை எதிர்பார்த்து தன் மைத்துனர் ஹரிஹரன் வீட்டில் காத்திருந்ததாகவும், அப்போது அந்த லாரியில் சுப்பிரமணியனும், கணேசனும் இரவு 11-45 முதல் 12-00 மணிக்குள் வந்து மணலைக் கொட்டிவிட்டு லாரியுடன் திரும்பிப் போனதாகவும் (கா. சா. 6) கிருஷ்ணமூர்த்தி சாட்சியமளித்திருக்கிறார். தொடர்ந்து விபத்து பற்றிய வழக்கு பதிவான பிறகு, புலன் விசாரணையிலும், விபத்தின்போது மேற்படி சுப்பிரமணியன்தான் மேற்படி லாரியை ஓட்டினார் என்பது உறுதியாகத் தெரியவந்ததாகவும் காவல் ஆய்வாளர்களான 1, 2 சாட்சிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆக, 1, 2, 3, 4, 5, 6 சாட்சிகளின் சாட்சியங்களை இணைத்துப் பார்க்கும்போது விபத்தின்போது கா. சா. 4 சுப்பிரமணியன்தான் விபத்தை ஏற்படுத்திய லாரியை ஓட்டியிருக்கிறார் என்பது அறுதியாய் விளங்குகிறது. இது பற்றிய சாட்சியத்தில் பெரிய குறை ஒன்றும் காணப்படவில்லை.

(3) சுப்பிரமணியன் விபத்திற்குப் பிறகு தகவல் சொல்வதற்காக திடீர்நகர் காவல் நிலையம் போய்விட்டு பிறகு காரி சொந்தக்காரர் வீட்டிற்குப் போய்த் தகவல் சொல்லிவிட்டு அவர் சொற்படி செய்கை நடந்த இடத்திற்குப் போயிருந்ததாகவும், அங்கு தன் மைத்துனர் நேருவும், முதலாளியின் மகன் குமாரும் வந்ததாகவும் அவர்களுடன் தெப்பக்குளம் காவல் நிலையத்திற்குப் போனதாகவும் சொல்லியிருக்கிறார். இந்த விபத்து பற்றி சொல்ல திடீர்நகர் காவல் நிலையத்திற்குப் போக வேண்டிய அவசியம் இல்லை என்றும் செய்கை நடந்த இடத்திற்கு அருகில் அவருடைய மைத்துனர் நேரு அந்த நேரத்தில் அங்கு வரவேண்டிய அவசியமில்லையென்றும், சுப்பிரமணியத்தை அவரியாபுரத்தில் கைது செய்ததாக முதல் சாட்சி ஆய்வாளர் வீரனன் சொல்லியிருப்பதும் முரண்பாடாக இருக்கிறதென்றும், எனவே விபத்தின் போது லாரியை சுப்பிரமணியன்தான் ஓட்டி வந்தார் என்பது ஐயத்திற்கு இடமாக உள்ளது என்றும் வாதிடப்பட்டது. ஆனால், இந்த வாதத்தில் வன்மை ஏதும் இல்லை.

(4) விபத்து ஏற்பட்ட உடன் விபத்தை ஏற்படுத்திய வண்டியின் ஓட்டுநர் பொது மக்களின் கோபத்திற்குப் பயந்துகொண்டு அந்த இடத்தை விட்டு ஓடுவது மனித இயல்புதான். அதை நடைமுறையிலும் காண்கிறோம். லோடுமேனாக வந்த சாட்சி கணேசன் (கா. சா. 5) கூட, தான் அடிபட்டு விழுந்தவுடன் முதலுதவி செய்து கொண்டு விட்டிற்கு ஓடிப்போய்விட்ட தாகச் சொல்லியிருக்கிறார். விபத்துக்குப் பிறகு அதை திடீர்நகர் காவல் நிலையத்திற்குப் போய்ச் சொல்ல வேண்டும் என்று வழியில் வந்த ஒருவர் சொல்ல அதை நம்பி திடீர்நகர் காவல் நிலையத்திற்குப் போனதாகவும், அங்கு போனபிறகு காவல் நிலையத்துக்குள் போகப் பயந்துகொண்டு லாரியின் சொந்தக்காரர் (மோகன்ராஜன்) வீட்டிற்குப் போய்த் தகவல் சொன்னதாகவும், சுப்பிரமணியன் (கா. சா. 4) சொல்லியிருக்கிறார். இது இயல்பாகவும், தம்பக் கூடியதாகவும் தான் இருக்கிறது. நேரு தன் மைத்துனர் என்றும் அவரும் மணல் லாரி வைத்திருக்கிறார் என்றும் சுப்பிரமணியன் சொல்லியிருக்கிறார். ஜராவதல்லூரில் பாதை ஓரத்தில் எல்லா மணல் லாரிகளுடன் மணலுடன் நிற்பதையும், சில லாரிகளிலிருந்து மணல் மேடு கொட்டி வைக்கப்படுவதையும், கொட்டி வைத்திருந்த மணலை இன்னும் சில லாரிகள் அள்ளுவதையும் நான் என்னுடைய மறைமுக விசாரணையில் 5—12—1998 அன்று கண்டேன். சுப்பிரமணியனைத் தெப்பக்குளம் காவல் நிலையத்திலேயே கைது செய்திருக்க வேண்டும். ஆனால், அவர்தான் விபத்தின்போது லாரியை ஓட்டி வந்தார் என்பதை உறுதி செய்வதற்காக விபத்து நடந்த இடத்திற்கும் மற்ற இடத்திற்கும் அழைத்துப் போய்விட்டு அவனியாபுரத்தில் கைது செய்ததாக முதல் சாட்சி ஆய்வாளர் வீரனன் சொல்லியிருக்கிறார். 31—10—1998 அன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார் என்பதை சா.ஆ.சி. 23, 24, 25 காட்டுகின்றன. எனவே, விபத்தின்போது சுப்பிரமணியன் தான் லாரியை ஓட்டியிருக்கிறார் என்பதற்குப் போதுமான, ஏற்றுக்கொள்ளக் கூடிய சாட்சியம் இருக்கிறது.

(5) விபத்தின்போது லாரியை சுப்பிரமணியத்திற்குப் பதிலாக ரமணன் என்பவர் ஓட்டினார் என்றும், அதை மூடி மறைக்கிறார்கள் என்றும் அனாமதேயக் கடிதம் இந்த அணையத்திற்கு வந்தது. தனக்கும் அப்படி வந்ததாகவும், அதைப் பற்றி ரமணன் என்பவரை விசாரித்து விபத்தின்போது அவர் லாரியை ஓட்டவில்லை என்பதைக் கண்டதாகவும், காவல் துறை தரப்பு இரண்டாவது சாட்சி ஆய்வாளர் சந்திரசேகரன் சாட்சியம் அளித்திருக்கிறார். அந்த ரமணன் என்பவரும் (கா. சா. 6) விபத்தின்போது தான் லாரியை ஓட்டவில்லை என்றும் தனக்கு வேண்டாதவர்கள் அப்படி ஒரு புரளியைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள் என்றும் அது உண்மையல்ல என்றும் இந்த ஆணையத்தின் முன்பு சாட்சியமளித்திருக்கிறார். இவர் சாட்சியத்தை மறுதலிக்கக் காரணம் எதுவும் காட்டப்படவில்லை. மேலும் விபத்தின்போதுதான் தான் லாரியை ஓட்டியதாக சுப்பிரமணியன் ஏன் பொய் சொல்ல வேண்டும் என்பதற்கும் காரணம் எதுவும் காட்டப்படவில்லை. ''அவர் லாரியை ஓட்டவில்லை, வேறொருவர் லாரியை ஓட்டினார்'' என்பதைத் தவிர எதிர்தரப்பில் வேறெதுவும் சொல்லப்படவில்லை. யார்தான் ஓட்டினார் என்று மறைமுகமாகக் கூடச் சொல்லப்படவில்லை. வேறு யாரோ லாரியை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியிருந்தால், அந்தப் பழியையும் குற்றத்தையும் சுப்பிரமணியன் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. வேறொருவர் ஏவலினால் இவர் இந்த விபத்தை ஏற்படுத்தி இருக்க முடியுமா என்ற ஐயத்துக்கும் இடமில்லை. எதிர் தரப்பில் மறைமுகமாகச் சொல்லுவதெல்லாம், இன்னொரு சாதியினர் (தலீக்கள்) சதி செய்திருக்கலாம் என்பதுதான். அந்தச் சாதியினர் தூண்டி சுப்பிரமணியன் இந்த விபத்தை ஏற்படுத்தியிருக்க வாய்ப்பே இல்லை. சுப்பிரமணியன் அம்பலம் இனத்தைச் சேர்ந்தவர். ரமணன் கூட அம்பலம் இனத்தைச் சேர்ந்தவர்தான். இறந்துபோன திரு. அய்யனன் அம்பலமும் இவர்களும் ஒரே இனத்தவர்கள். அப்படியிருக்க, தலித்கள் ஏவலில் சுப்பிரமணியனோ, ரமணனோ செயல்படமாட்டார்கள். இவர்கள் கூலிப்படையைச் சேர்ந்தவர்கள் என்றோ சதி செய்தவர் என்று சொல்லப்படும் டாக்டர் கிருஷ்ணாமிக்கும் இவர்களுக்கும் தொடர்பிருப்பதாகவோ யாரும் சொல்லுவதில்லை. எனவே, தலித்கள் தூண்டி இவர்கள் இருவரில் ஒருவர் இந்த விபத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்ற கூற்றுக்கு ஆதாரமே இல்லை.

(6) தலைவர்கள் வந்த 2, 3 கார்களைக் குறி வைத்து லாரியை ஓட்டியவர் மோதி இருக்கிறார் என்றும், இது சதியைக் காட்டுகிறது என்றும் வாதிடப்பட்டது. இந்த வாதத்துக்கு அறுதியான சாட்சியம் இல்லை. விபத்து நடந்த நேரம் நடுநிசி. அந்த நேரத்தில், எதிரில் வரிசையாக கார்கள் வந்திருக்கின்றன. கார்கள் மற்றும் லாரியின் (Head Light) விளக்கு வெளிச்சத்தில் எதிரில் வரும் வண்டிகளின் எண்களையோ அடையாளத்தையோ மோதுவதற்கு முன்பு கண்டிருக்க முடியாது. முதல் காரை (டிவியு 3668) ஓட்டிவந்த சாட்சி குண்டுமலையே (ஆர் டபிள்யு. 2) லாரி நேராகத் தன்னுடைய காரை நோக்கியே வந்ததாகவும், தான் தனது காரை இடது புறமாக ஒதுக்கியதால் தான், லாரி 2, 3-வதாக வந்த கார்களின் மீது போய் மோதியதாகவும் சாட்சியம் அளித்திருக்கிறார். இதை 2-வது காரில் பயணம் செய்த ஆர்.டபிள்யு. 4 ஜீவானந்தமும் உறுதி செய்கிறார். ஆர்.டபிள்யு. 5 விபத்தை நேரில் கண்டவரில்லை. எனவே, இதுபற்றிய அவரின் சாட்சியம் செவி வழிச் செய்திதான். எனவே, 2, 3-வது கார்களைக் குறி வைத்து லாரி மோதியது என்ற வாதம் அடிபட்டுப்போய் விடுகிறது. உண்மையில் லாரி அதிவேகமாக, கட்டுப்பாடில்லாமல் வந்து எதிரே வந்த கார்களைக் கவனிக்காமல் அவைகள் மீது மோதப்பார்த்திருக்கிறது. முதல் காரை (டிஷ்யு 3663) ஓட்டிவந்த ஓட்டுநர் குண்டுமலையின் (ஆர் டபிள்யு. 2) திறமையினால் அது தவிர்க்கப்பட்டு, 2, 3-வது கார்களின் மீது லாரி மோதிருக்கிறது. விபத்து நடந்த இடத்துக்கு அருகில், தேவர் ஜெயந்தி விழாவுக்காக அலங்கார வளைவு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அது பாதையின் அகலத்தை, போவதற்கு ஒரு பகுதியாகவும் வருவதற்கு ஒரு பகுதியாகவும் இரண்டாகப் பிரித்திருக்கிறது. அந்த சூழ்நிலையில், லாரி கண்மூடித்தனமாக வேகமாக வந்து விபத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் ஐயமேயில்லை (மணல் லாரிகள் கண்மூடித்தனமாக என வேஷ்டில் வருவதை நாள் பார்க்கவும் முடிந்தது) எனவே லாரி 2, 3-வது கார்களை குறி வைத்து மோதியது என்ற கூற்று உண்மையல்ல.

(7) வாதத்துக்காக, லாரியை ஓட்டி வந்தவர் வேண்டுமென்றே கார்களைக் குறி வைத்து மோதினார் என்று எடுத்துக் கொண்டால், விபத்தில் தானும் காயம் அடையவோ, மரணமடையவோ அவர் தயாராக—தற்கொலைப் படையாக— இருந்திருக்க வேண்டும். மேலும், எந்தக் காரில் யார் வருகிறார்கள், கார்கள் எந்த வரிசையில் வருகின்றன, அவைகளை எந்த இடத்தில் எதிர்கொள்ளலாம் என்ற விவரங்கள் லாரியை ஓட்டி வந்தவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். கார்களில் யார் யார் வருகிறார்கள், கார்கள் எந்த வரிசையில் வருகின்றன என்ற விவரங்களைக் காவல்துறையினர் குறித்துக் கொண்டனர் என்று எதிர்தரப்பில் சொல்லப்படுகிறது. அந்த விவரங்களை லாரி ஓட்டுநர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. காவல்துறையைச் சேர்ந்தவர்களே அந்த விவரங்களை லாரி ஓட்டுநருக்குத் தெரிவித்திருக்க வேண்டும் என்பது அதீத கற்பனை. அப்படியானால், லாரியை யார் ஓட்டிவருவார் என்ற தகவல் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். காவல் துறையினர் பார்வட்டு பிளாக் கட்சித் தலைவர்களுக்கு எதிராக சதி செய்ய எந்தக் காரணமும் சொல்லப்படவில்லை. ''தேவர் ஜெயந்தி'' அமைதியாக நடைபெற வேண்டும் என்பதற்காகவும், அசம்பாவிதம் ஏதும் ஏற்படக்கூடாதென்பதற்காகவும் காவல்துறையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றனர் அவ்வளவுதான். இதை ஆர்.டபிள்யு. 5 திரு. வல்லரசு அவர்களே தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டார். ஆக, லாரியை ஓட்டி வந்தவர், கார்களைக் குறி வைத்து மோதினார் என்ற வாதத்துக்கு இடமே யில்லை.

(8) இந்த ஆணையத்துக்கு வந்த வாக்குமூலங்களில் (சா.ஆ.பி.7 முதல் பி15 வரை) ஏதோ சதி நடந்திருக்கிறது; அதை நீதிபதி விசாரித்துக் கண்டுபிடிக்க வேண்டும் என்று மொட்டையாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. சதிகாரர்கள் யார், யார் மீது சந்தேகம் என்ற விவரங்கள் ஏதும், இந்த வாக்குமூலங்களில் சொல்லப்படவில்லை. விசாரணையின் போதுதான் ஆர்.டபிள்யு. 1 மற்றும் ஆர்.டபிள்யு. 2, தங்களுடைய சாட்சியத்தில் புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி மீதுதான் சந்தேகம் என்று சொல்லுகிறார்கள். தேவர் ஜெயந்தியை எதிர்த்து, அது ஒரு துக்கதினம் என்றும், இவரி தேவர் ஜெயந்தி நடக்காது என்றும் அவர் பேசி வந்தார் என்றும், அதனால்தான் அவர்மீது சந்தேகம் என்றும் இந்த இரு சாட்சிகளும் சொல்லுகிறார்கள். இதை திரு. வல்லரசு அவர்களும் தன்னுடைய வாக்குமூலத்தில் (சா.ஆ.பி6) வலியுறுத்துகிறார். இதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.

(9) ஆர்.டபிள்யு. 1, ஆர்.டபிள்யு. 3, இருவரும் நீண்டகாலமாக பார்வர்டு பிளாக் கட்சியில் உறுப்பினர்களாக இருப்பவர்கள், ஆர்.டபிள்யு. 1 கட்சியில் பொறுப்பான பதவி வகிப்பவர். பார்வர்டு பிளாக் கட்சி கேட்டுத்தான் இந்த விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது என்பதையும், இந்த ஆணையம் வெளியிட்ட அறிக்கைகளைப் பார்த்து விட்டுத்தான் தாங்கள் இருவரும் சா.ஆ.பி. 1, 3 என்ற பிரமாண வாக்குமூலங்களைத் தாக்கல் செய்ததாகவும் இருவருமே ஒப்புக்கொள்ளுகின்றனர். அப்படியிருந்தும், அந்த வாக்குமூலங்களில், புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி மீது ஐயமிருப்பதாக இவர்கள் சொல்லவில்லை. அப்படிச் சொல்லாததற்கு விளக்கமும் இல்லை. உண்மையிலேயே, இவர்கள் புதிய தமிழகம் கட்சித் தலைவரைச் சந்தேகப்பட்டிருந்தால் தங்கள் வாக்குமூலங்களில் அதைச் சொல்லி யிருக்கலாம். எனவே, இவர்களின் தற்போதைய கூற்று, காழ்ப்புணர்ச்சியில் எழுந்த, கால தாமதமான கற்பனையே தவிர உண்மையல்ல.

(10) மூன்றாவது சாட்சியான (ஆர்.டபிள்யு. 3) திரு. யானைமலை ஐந்தாவதாக வந்த காரில் பயணம் செய்ததாகச் சொல்லுகிறார். விபத்தின்போது நான்கு கார்கள்தான் விபத்து நடந்த இடத்தில் இருந்திருக்கின்றன. இவர் பயணம் செய்ததாகச் சொல்லப்படும் 5வது கார் விபத்துக்குப் பிறகுதான் அங்கு வந்து சேர்ந்திருக்க முடியும். அப்படியானால், விபத்து நடந்த விதத்தை இவர் அறிந்திருக்கவே முடியாது. அப்படியிருந்தும், லாரி முதல் காரைத் தவிர்த்து மற்ற கார்களைக் குறி வைத்துத் தாக்கியது என்று இவர் சொல்லுவது, விபத்தை எப்படியாவது சதி என்று காட்ட வேண்டும் என்ற காழ்ப்புணர்ச்சியைத்தான் காட்டு கிறது. இறந்துபோன திரு. அய்யனன் அம்பலத்துக்கு எதிரிகளே கிடையாது என்றும், அவர் என்றுமே தனக்குப் பாதுகாப்பு கேட்டதில்லை என்றும், தனிப்பட்ட பாதுகாப்பும் வைத்துக் கொண்டதில்லை என்றும், அவரி ஒரு அரசியல் தலைவர்தான் என்றும், சாதித் தலைவர் அல்ல என்றும் எதிர்தரப்பு சாட்சிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். அவர் ஒரு நேர்மையான, அப்பழுக்கற்ற அரசியல்வாதி என்பதை சாட்சியங்கள் காட்டுகின்றன. இப்போ பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் என்பதையும், டாக்டர் கிருஷ்ணசாமி புதிய தமிழகம் கட்சித் தலைவர் என்பதையும் தவிர, அவர்களுக்குள் வேறு எந்த விரோதமுமில்லை என்பதையும் இந்த சாட்சிகளே ஒப்புக்கொள்கின்றனர். இந்த சங்கதிகளைப் பார்க்கையில், புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமியை இந்த விபத்துடன் தொடர்புபடுத்துவது உள்நோக்கத்துடன் சொல்லப் படுவதுதான்.

(11) விஞ்ஞான ஆய்வரின் அறிக்கைகளை வைத்து லாரியில் Brakes நல்ல நிலையில் இருந்திருக்கின்றன என்றும், பாதையில் Brake போட்ட அடையாளமே (டயர் மார்க்) இல்லை என்றும், டயர் வெடித்துப் போனதாக படங்கள் காட்ட வில்லை என்றும், எனவே லாரி ஓட்டுநர் சுப்பிரமணியன் (சா.சா.4) சொல்லுவதுபோல் விபத்து நடக்கவில்லை என்றும், ஆகவே இந்த சுப்பிரமணியன் விபத்தின்போது லாரியை ஓட்டியவர் அல்ல என்றும், எதிர்தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர்கள் வன்மையாக வாதிட்டார்கள். வழக்கறிஞர் திரு. சுரேந்திரன் அவர்கள் ஒருபடி மேலே போய், இந்த விபத்தை நக்சலைட்கள் போன்ற பெரிய சதிகாரர்கள்தான் ஏற்படுத்தியிருக்க முடியும் என்றும் வாதிட்டார். ஆனால், இந்த வாதக் களில் வன்மை ஏதுமில்லை. விபத்து நடந்தபோது மழை பெய்து ஓய்ந்து, தூறலாகப் பெய்து கொண்டிருந்திருக்கிறது. எனவே, டயர்மார்க் ஏதும் ஏற்படவாய்ப்பில்லை. Brake போட்டும் வழுக்கிக்கொண்டே போயிருக்க மிகுந்த வாய்ப்பிருந்திருக்கிறது. அல்லது அதிவேகமாக வந்து, Brake போடாமலேயே இருந்திருக்கலாம். மூன்று கார்களின் மீது மோதி, கிழக்கு மேற்காகப் போன லாரி வடக்குத் தெற்காகத் திரும்பி நின்றதை யாரும் மறுப்பதில்லை. இது ஒன்றே, லாரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டப்பட்டு, விபத்து ஏற்பட்டிருக் கிறது என்பதை அறுதியாகக் காட்டுகிறது. விபத்து நடந்த இடத்திலேயே லாரி இருந்து கைப்பற்றப்பட்டிருக்கிறது. இறந்து போன திரு. அய்யனன் அம்பலம் அவர்களுக்கு எதிரிகளே கிடையாது என்பதை எதிர்தரப்பு சாட்சிகளே ஒப்புக்கொள்ளுகின்றனர். எனவே, விபத்தின் போது சுப்பிரமணியன் லாரியை ஓட்டவில்லை, மற்றும் சதிகாரர் ஒருவர்தான் லாரியை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்ற வாதங்களில் வன்மை ஏதுமில்லை. விபத்துக்குப் பிறகு, லாரியை யார் ஓட்டினார் என்பதைக்காண எதிர்தரப்பு சாட்சிகள் யாரும் முயற்சியே செய்யவில்லை. லாரியை ஓட்டி வந்தவரைப் பற்றி சந்தேகம் ஏதுமில்லாததால்தான் யாரும் அந்த முயற்சியை மேற்கொள்ளவில்லை. இப்போழுது காலதாமதமாக, சுப்பிரமணியன் லாரியை ஓட்டவில்லை, வேறு ஒருவர் ஓட்டியிருக்கிறார் என்று சொல்லுவதை யாரும் எளிதாகச் சொல்லிவிடலாம். வெளி வதந்திகூட ''கிளீனர் ஓட்டினார்'' என்பதுதான் எனவே, விபத்து பற்றிய சாட்சியத்தில் குற்றங்காட்டி, லாரியை சுப்பிரமணியன் ஓட்டவில்லை என்றும், ''இது விபத்தல்ல, சதி'' என்றும் சொல்லுவதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.

(12) ஆணையம் பதிவு செய்த சாட்சியங்களைத் தவிர, சில பத்திரிக்கைகளிலும் அனாமதேயக் கடிதங்களிலும் கண்டிருக்கும் செய்திகளையும் விவாதிப்பது விசாரணையை முழுமையாக்கும் என்று கருதுகிறேன். அனாமதேயக் கடிதங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது முறையல்ல. அது தவறான முன்னுதாரணத்துக்கு இடமாகும். இருந்தாலும், உண்மையைக் கண்டறிய ஏற்படுத்திய விசாரணை ஆணையம் இது என்பதால் அதையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுகிறேன். ஐந்து அனாமதேயக் கடிதங்கள் (சா.ஆ.சி. 18, 19, 20, 21, 22) வந்திருக்கின்றன (சா.ஆ.சி. 20 என்பது சா.ஆ.சி, 2-ன் பிரதிதான்). ஒரு கடிதம் சா.ஆ.சி. 18, ''அய்யணன் அம்பலம் அவர்களின் அரசியல் வாரிசு'' என்று ஒருவர் எழுதியிருக்கிறார். இதில், மதுரை மீனாட்சி மருத்துவமனை நடத்திவரும் திரு. டாக்டர் சேதுராமன் சாதி வெறியைத் தூண்டிவிடும் ஒரு தேவர் சாதி வெறியர் என்றும், சாதி வெறியைத் தூண்டிவிட்டு கலகம் விளைவிக்கிறார் என்றும், முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் ஆதரவுடன் செயல்படுகிறார் என்றும், திரு. அய்யணன் அம்பலம் அவர்கள் அதை எதிர்த்ததால், அவரைத் தீர்த்துக்கட்ட முடிவுசெய்து, கூலிப்படை அமைத்து இந்த விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. டாக்டர் திரு. சேதுராமன் தேவர், பேரவைத் தலைவர் என்பதும், மூவேந்தர் முன்னேற்றக் கழகம் அமைத்திருக்கிறார் என்பதும், திரு. அய்யணன் அம்பலம் அவர்கள் தேவர் பேரவை அரசியல் கட்சியாகச் செயல்படுவதை எதிர்த்தார் என்பதும் உண்மைதான். ஆனால், இது காரணமாகவே, டாக்டர் சேதுராமன் கூலிப்படை தயார் செய்து திரு. அய்யணன் அம்பலத்தின் மரணத்தை ஏற்படுத்தினார் என்று சொல்வது, அவர் மீது களங்கம் கற்பிக்கும் வீண் முயற்சியே! அரசியலிலும், பொது வாழ்விலும் மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களும், எதிர் அணிகள் இருப்பதும் இயல்புதான். அதை வைத்தே, அவர்கள் ஒருவருக்கொருவர் விரோதி என்று சொல்ல முடியாது. மேலும், எதிர் தரப்பில் விசாரிக்கப்பட்ட 5 சாட்சிகளில் யாருமே இப்படி ஒரு குற்றச்சாட்டை டாக்டர் சேதுராமன் மீது சொல்ல முன்வரவில்லை. எனவே, இக் கடிதத்தில் கண்ட சங்கதிகளுக்கு ஆதாரமே இல்லை.

(13) இரண்டாவது கடிதம் (சா.ஆ.சி. 19) ''தேவர் பேரவை, கல்லம்பல்'' என்ற கையெழுத்தில் வந்திருக்கிறது. இதில், லாரியை ரமணன் என்பவர்தான் அதிவேகமாக ஓட்டி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும், காவல் துறைக்கு அவர் பணம் கொடுத்து, சுப்பிரமணியத்தைப் பலிகடா ஆக்கியிருக்கிறார் என்றும் கண்டிருக்கிறது. விபத்தின்போது, லாரியை சுப்பிரமணியன்தான் ஓட்டினார் எனபதற்கும், ரமணன் ஓட்டவில்லை என்பதற்கும் போதுமான சாட்சியங்களிருக்கின்றன என்பதை மேலே கண்டோம். எனவே, இக் கடிதத்தில் கண்டிருக்கும் சங்கதியும் உண்மையில்ல.

(14) அடுத்த கடிதம் சா.ஆ.சி. 21. இந்தக் கடிதத்தில் திரு. அய்யணன் அம்பலம் அவர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் வந்த கார்கள் செம வேகத்தில் வந்து லாரியின் மீது மோதி நொறுங்கி விட்டன என்றும், லாரி சந்துக்குள் இருந்து வரவில்லை என்றும், லாரி மீது கார்கள் தான் மோதி அப்பளம் போல நொறுங்கிவிட்டன என்றும் லாரியின் மீது தவறு எதும் இல்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன், திரு. அய்யணன் அம்பலம் பற்றியும் அவதூறு கூறப்பட்டிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை. பதிவாகியிருக்கும் சாட்சியங்கள் இந்த சங்கதிகளுக்கு முற்றிலும் மாறாக இருக்கின்றன. எனவே, இந்தக் கடிதத்தில் கண்டிருக்கும் சங்கதிகள் உண்மையல்ல.

(15) கடைசி கடிதம் சா.ஆ.சி. 22 திருமங்கலத்திலிருந்து திரு. ராமதாஸ் என்பவர் எழுதியிருக்கிறார். திரு. அய்யணன் அம்பலம் நேர்மையானவர் என்றும், பண்பாளர் என்றும் அவரும் மற்றவர்களும் வந்த வாகனங்களுக்கு தக்க பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை என்றும், பரிசையாக வந்த கார்கள் மீது லாரி திடீர் என மோதியது என்பதை விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுள்ளார். திரு. அய்யணன் அம்பலமும், மற்றவர்களும் வந்த கார்களுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்படாதது உண்மை. அதிலும், ஒரு கட்சியின் அகில இந்தியத் தலைவர் ஒருவரும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் வந்த கார்களுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். கொடுக்கப்பட்டிருந்தால் விபத்து தடுக்கப்பட்டு இருக்கலாம். அல்லது விபத்து ஏற்பட்டு இருந்தாலும், அதிக சேதம் இல்லாமல் தப்பி இருக்கலாம். பாதுகாப்பு கொடுக்கப்படாதது காவல் துறையின் தவறு, அது சதியின் பாற்பட்டதல்ல.

(16) அடுத்து. 13—11—1998 தேதியிட்ட ''நெற்றிக்கண்'' என்ற வார இதழில், ''அய்யணன் அம்பலம், திட்டமிட்டு கொலை'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகி இருக்கிறது (சா.ஆ.சி. 2 மற்றும் சி. 20). இதை எழுதியவர் பெயர் இல்லை. எனவே, ஆசிரியர்தான் இதை எழுதியிருக்க வேண்டும் என்று, அவருக்கு, சாட்சி சொல்ல வரும்படி பதிவு அஞ்சலில் அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதை அவர் பெற்றுக் கொண்டும், சாட்சி சொல்ல வரவில்லை. ஆணையத்துக்கு மறு மொழியும் அனுப்பவில்லை (எனவே, இதுவும் அனாமதேயக் கடிதம் போல்தான்). இதில் ''இதுகாறும் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் திரு. அய்யணன் அம்பலமும், பார்வர்டு பிளாக் கட்சியும் இணைந்தே வந்தன என்றும், அந்தத் தொடர்ப்பைத் துண்டித்துக் கொண்டு ''திமுக கருணாநிதி எதிர்ப்பு'' என்ற புதிய பயணம் தொடர முடிவு செய்தனர் என்றும், அதனால் தி.மு.க. அரசு பார்வர்டு பிளாக்

கட்சித் தலைவர்களைக் கொல்ல சதி செய்து, தேசீயத் தலைவர்கள் வந்த கார்களைக் குறி வைத்து லாரியைக் கொண்டு தாக்கியிருக்கின்றனர் என்றும், எனவே இது ஒரு விபத்து என்பதை நம்புவதற்கில்லை'' என்றும் கண்டிருக்கிறது. இந்தக் கூற்றுகளுக்கு, ஆதாரமாக டாக்டர் ராமகிருஷ்ணன் என்பவரின் பேட்டியும், திரு. நகைமுகன் என்பவரின் பேட்டியும் கட்டுரையில் காட்டப்பட்டுள்ளன. ''தனி நபர் அல்லது ஒரு குழு இதைச் செய்திருக்க முடியாது என்றும், வயர்லெஸ், செல்லூலர், மூவ்மெண்டைகென்ட் பை சென்ட் அறியும் வரய்ப்பு ஆகியவை உள்ளவர்கள் மட்டுமே அதைச் செய்திருக்க முடியும் என்றும், காவல் துறையைக் கையில் வைத்திருக்கும் பெரிய மனிதர்தான் இதற்கு காரணம் என்று தான் நம்புகிறேன்'' என்றும் நகைமுகன் பேட்டியில் கூறியதாகவும், இந்தக் கட்டுரையில் கண்டிருக்கிறது. ''காவல் துறையை கையில் வைத்திருப்பது யார், முதலமைச்சர் கருணாநிதி'' என்று கட்டுரை முடிந்து இருக்கிறது. தி.மு.க.விலிருந்து பார்வர்டு பிளாக் கட்சி விலகிப் போகிறது என்பதனால், காவல் துறை உதவியுடன் திமுக அரசு சதி செய்து விபத்தை ஏற்படுத்தி பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர்களைக் கொலை செய்துவிட்டது என்பதுதான் இந்தக் கட்டுரையின் மையக் கருத்து. இதை எழுதியவர், இந்தக் கருத்தை நம்பியிருப்பாரானால், இந்த ஆணையத்துக்கு வாக்கு மூலம் அனுப்பியிருக்கலாம்; அல்லது அழைப்பாணையை ஏற்று சாட்சி சொல்ல வந்திருக்கலாம். இதில் எதையும் செய்யவில்லை. பேட்டி கொடுத்ததாகச் சொல்லப்படும் டாக்டர் திரு. ராமகிருஷ்ணனோ, திரு. நகைமுகனோ, இந்த ஆணையத்துக்கு வாக்குமூலம் எதும் அனுப்ப வில்லை. அவர்கள் சொல்லியதாகக் கூறப்படும் கருத்து அவர்களுடையதாக இருந்தால், அவர்கள் இந்த ஆணையத்துக்கு வாக்குமூலம் அனுப்பியிருக்கலாம். அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. எனவே, இதில் சொல்லப்பட்டிருக்கும் கருத்தை ஆதாரபூர்வமானதாகவோ, உண்மையானதாகவோ எடுத்துக் கொள்ளுவதற்கில்லை. எதிர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் திரு. வல்லரசு (ஆர்.டபிள்யூ. 5) கூட இந்தக் கருத்து தனக்கு உடன் பாடில்லை என்று சொல்லிவிட்டார். மேலும், விபத்தை ஏற்படுத்திய லாரியை சுப்பிரமணியன் தான் ஓட்டினார் என்றும் அவரும் அம்பலம் சாதியைச் சேர்ந்தவர் என்றும் இந்தக் கட்டுரையில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவர் என் சதியில் பங்கு கொள்ள வேண்டும் என்பதற்குக் காரணமே இல்லை. லாரி எதோ குறுக்குச் சந்திலிருந்து வந்து விபத்தை உண்டாக்கியதாகச் சொல்கிறார்கள் என்றும் இந்தக் கட்டுரை சொல்லுகிறது. உண்மையில், லாரி குறுக்குச் சந்திலிருந்து வரவில்லை; நேரே வந்துதான் மோதியது என்பதுதான் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. விபத்து நடந்த இடத்தில் லாரி வரக்கூடிய குறுக்குச் சந்து எதுவும் கிடையாது என்பதை நான் நேரில் கண்டேன்.

(17) 29-10-1998 அன்று இரவு பசும்பொன்னில் நடந்த பொதுக் கூட்டத்தில் தலைவர்கள் பேசியதை இராமநாதபுரம் காவல் துறை இளநிலை அறிக்கையாளர் குறிப்பெடுத்து (சா.ஆ.சி. 26) அனுப்பியிருக்கிறார். அந்தக் கூட்டத்தில் திருவாளர்கள் உ.பி. ராஜன், வல்லரசு, எம்.எல்.ஏ.), சந்தானம், அய்யனன் அம்பலம், பிஸ்வாஸ் (எம்.பி.) ஆகியவர்கள் பேசியிருக்கிறார்கள். அந்தக் குறிப்பின்படி திருவாளர்கள் உ. பி. ராஜன், வல்லரசு, சந்தானம், பிஸ்வாஸ் ஆகியவர்கள் புதிய தமிழகம் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமியைத் தாக்கிப் பேசியிருக்கிறார்கள். காவல் துறையினரின் கெடுபிடிகள் அதிகமாக இருப்பதாகவும், அவர்கள் அரசுக்கு உண்மையை எடுத்துச் சொல்லாமல் மக்களுக்கும் அரசுக்கும் இடைவெளியை உண்டாக்கி விட்டனர் என்றும், தோழமைக் கட்சியை எச்சரிப்பதாகவும் பேசியிருக்கிறார்கள். திரு. அய்யனன் அம்பலம் அவர்கள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் புகழைப்பாடி, அவர் சாதிகளுக்கு அப்பாற்பட்டவர் என்றும், அவர் தாழ்த்தப்பட்ட மக்களை எதிர்க்கவில்லை என்றும், தேவர் பேரவை அரசியல் கட்சியாக மாறப் பார்க்கிறது என்றும் பேசியிருக்கிறார். (சா.ஆ.சி. 26 பார்க்கவும்). இந்தப் பேச்சுக்களை வைத்து பார்வர்டு பிளாக் கட்சி தி.மு.க. வையோ, அதன் தலைவரையோ எதிர்க்கத் தீர்மானித்துவிட்டது என்றோ, அந்தத் தகவல் தி.மு.க.வுக்கோ, அரசுக்கோ எட்டி, அவர்கள் பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர்களைக் கொல்ல சதி செய்தனர் என்றோ சொல்லுவதற்கில்லை. ஒரு கட்சியின் கொள்கை அதன் தலைமைப் பீடத்தில் தீர்மானிக்கப்படுகிறது. பார்வர்டு பிளாக் கட்சி தி.மு.க.வுடனான உறவை துண்டித்துக்கொள்ளுவதாக யாரும் பேசவில்லை. அப்படி முடிவு எடுத்ததாக சாட்சிய மேயில்லை. உண்மையில் பார்வர்டு பிளாக் கட்சி அதிகாரபூர்வமாக இந்த ஆணைய விசாரணையில் பங்கேற்கவில்லை. அந்தக் கட்சி சார்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜராகவில்லை. பார்வர்டு பிளாக் சட்டமன்ற உறுப்பினர்களான திரு. சந்தானமும், திரு. வல்லரசும் தங்கள் வாக்குமூலங்களில் அப்படி ஒரு முடிவெடுக்கப்பட்டதாகச் சொல்லவில்லை. திரு. வல்லரசு அவர்கள் தனது சாட்சியத்திலும் அப்படிச் சொல்லவில்லை. ஒரிரண்டு தலைவர்கள் பொதுக் கூட்டத்தில் பேசிய ஒரிரு வார்த்தைகளை வைத்து, கட்சியின் முடிவு அது என்று சொல்லுவதற் கில்லை. இரவு 10-00 மணி அளவில் பேசப்பட்ட ஒரு சங்கதி, இரண்டு மணி நேரத்துக்குள் தொலை தூரத்தில் உள்ளவர்களுக்கு எட்டி, அவர்கள் சதித் திட்டம் தீட்டினார்கள் என்பது நடைமுறை சாத்தியமல்ல. பொதுக் கூட்டத்தில் பேசிய தலைவர்கள் காவல் துறையின் கெடுபிடிகளைத்தான் கண்டித்திருக்கிறார்கள். எனவே, காவல் துறையினரோ, தி.மு.க. அரசோ அல்லது இரண்டுமோ, சதித் திட்டம் தீட்டினார்கள் என்ற கூற்று ஆதாரமற்றதாகும்.

(18) பொதுக் கூட்டத்தில் பேசியவர்கள் புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமியைத் தாக்கிப் பேசியிருக்கிறார்கள் என்பது உண்மைதான். அண்மைக்கால அரசியலில் அரசியல் கட்சிகள் ஒன்றையொன்று தாக்கிப் பேசுவது வழக்கமான ஒன்றுதான்.

அதை வைத்து டாக்டர் கிருஷ்ணசாமி சதித் திட்டம் தீட்டி இந்த விபத்தை ஏற்படுத்தியிருக் கிறார் என்று சொல்வது காழ்ப்புணர்ச்சிதான். இந்தக் கூட்டம் நடந்து முடிந்து சுமார் ஒன்றரை மணி நேரத்தில் விபத்து நடந்திருக்கிறது. அதற்குள் இந்தப் பேச்சுக்கள் டாக்டர் கிருஷ்ணசாமியை எட்டியிருக்க முடியாது. எனவே, டாக்டர் கிருஷ்ணசாமிதான் சதி செய்து விபத்தை ஏற்படுத்தினார் என்று சொல்வது அபத்தம். எனவே இந்த உண்மையில் சொல்லப் பட்டவைகள் ஆதாரமில்லாதவைகளே. இது ஒரு பரபரப்பூட்டும் வதந்திக் கட்டுரைதான். இந்தக் கட்டுரையின் கருத்தை திரு. வல்லரசு (ஆர்.டபிள்யூ. 5) அவர்களே தனது சாட்சியத்தில் மறுத்துவிட்டார்.

(19) நவம்பர் 11—17 தேதியிட்ட ''தமிழன் எக்ஸ்பிரஸ்'' (சா.ஆ.சி. 1) என்ற வார இதழில் ''அய்யனன் அம்பலம் மரணம்— என்னை சிக்க வைக்க சதி— வல்லரசு பேட்டி'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகியிருக்கிறது. இதை திரு. எஸ். மார்க்கண்டன் என்பவர் எழுதியிருக்கிறார். டிரைவர் சுப்பிரமணியன் செல்லுலர் போன் வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது என்றும், காவல் துறையினர் அவரைத் தேடி அவர் வீட்டுக்குப் போனபோது அவர் தூங்கிக் கொண்டிருந்தார் என்றும், விபத்தின்போது லாரியின் கிளீனர்தான் அதை ஓட்டி வந்ததாகத் தனக்குத் தகவல் வந்தது என்று வல்லரசு, எம்.எல்.ஏ. சொல்லியதாகவும் இந்தக் கட்டுரையில் கண்டிருக்கிறது. ''என் சந்தேகமெல்லாம் புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த வர்கள் சொன்ன வார்த்தைகளில்தான்; தேவர் ஜெயந்தியைத் 'துக்க தினம்' என்றார்கள். அதே மாதிரி துக்க தினமாகவே ஆகிவிட்டது; இன்றைய நிலைமையில் உண்மையைக் கண்டறிய நீதி விசாரணை நடத்தப்பட்டே ஆகவேண்டும்'' என்று திரு. வல்லரசு பேட்டியில் சொன்னதாக இந்தக் கட்டுரை சொல்லுகிறது.

(20) இதையொட்டி திரு. வல்லரசு அவர்கள் சா.ஆ.பி. 6 என்ற உறுதிமொழி வாக்கு மூலம், 24—12—1998 அன்றுதான் தாக்கல் செய்தார். ஏதோ, தனது வாக்குமூலத்தைத் தனது வக்கீல் திரு. அனந்த பத்மநாபனுக்கு Fax மூலம் அனுப்பியிருந்ததாகவும், அது தவறி விட்டதென்றும் காலதாமதத்துக்கு விளக்கம் சொல்லுகிறார். உண்மையில் வக்கீல் அனந்த பத்மநாபன் இவருக்காக கடைசி வரையில் வக்காலத்து எதுவும் தாக்கல் செய்யவே இல்லை. எனவே, இந்த விளக்கம் உண்மையாகத் தெரியவில்லை. திரு. வல்லரசு அவர்கள் அதிகாலை இரண்டு மணிக்கு மதுரைக்கு வந்து சேர்ந்ததாகவும், அப்படி வந்தபோது, சம்பவம் நடந்த இடத்தின் வழியாக வந்ததாகவும் சொல்கிறார். அப்படியானால், இவர் சம்பவ இடத்தை அதிகாலை 1-45 மணி அளவில் கடந்திருக்க வேண்டும். அப்படியிருந்தும் சம்பவ இடத்தில் எதையும் பார்க்கவில்லை என்றும், தனது அறைக்குத் திரும்பிய பிறகு, தனது உதவியாளர் சொல்லித்தான் சம்பவம் பற்றித் தனக்குத் தெரிய வந்ததாகவும் சாட்சியத்தில் சொல்லுகிறார். இதை என்னால் நம்ப முடியவில்லை. சம்பவம் பெரிய விபத்து. 2, 3 வாகனங்கள் மோதி சேதமடைந்து, பலர் காயமுற்றிருக்கின்றனர். அந்த நிலையில் சம்பவ இடத்தில் கூட்டம் கூடியிருக்கும். சேதமடைந்த வாகனங்கள் நின்றிருக்கும். அவைகளை அப்புறப்படுத்த 2, 3 மணி நேரங்களாவது ஆகியிருக்க வேண்டும். மணல் லாரிகள் போக்குவரத்து நிறைந்த அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டிருக்கும். இந்த சூழ்நிலையில் சம்பவம் நடந்த இடத்தில், 2,3 மணி நேரத்துக்கு சம்பவத்தின் அடையாளங்கள் இருந்திருக்கும். அந்த வழியாக வந்த எவரும் சம்பவத்தைப் பற்றிக் கேட்டறிந்திருப்பார்கள். அதிலும் தலைவர்கள் காயமடைந்தது பெரிய செய்தியாகப் பேசப்பட்டிருக்கும். உண்மையில், திரு. வல்லரசு அவர்கள், தான் சொல்லுவது போல் வந்திருந்தாராளால் வழியிலேயே (சம்பவம் நடந்த இடத்துக்கருகிலேயே) தலைவர்கள் காயமடைந்த சம்பவத்தைக் கேட்டுப் பதறிப் போயிருப்பார். அப்படியில்லாமல், சம்பவ இடத்தில் எதுவும் கேள்விப்படாமல், அறைக்கு வந்த பிறகு, உதவியாளர் சொல்லக்கேட்டுத் தெரிந்து கொண்டதாகவும். அதன் பிறகு மருத்துவமனைக்குச் சென்று பார்த்ததாகவும் இவர் சொல்லுவது நம்பக் கூடியதாக இல்லை. இது விபத்து அல்ல, விபத்து போல நடத்தி முடிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி என்று சந்தேகப்படுவதாகவும், அதற்குச் சான்றுகள் பல உள்ளன என்றும் இந்த வாக்குமூலத்தில் சொல்லி இருக்கிறார். அவர் சொல்லும் சான்றுகள் :—

(1) பயணத்தின்போது யார் யார் எந்த எந்தக் கார்களில் பயணம் செய்கிறார்கள் என்ற விபரத்தைக் காவல் துறையினர் குறிப்பிடுத்து திரு. அய்யனன் அம்பலம் அவர்கள் இரண்டாவது காரில்தான் பயணம் செய்கிறார் என்ற தகவல் காவல் துறை அதிகாரிகளிடையே தொலைத் தகவல் தொடர்பு கருவிகளால் பறிமாறிக் கொள்ளப் பட்டது;

(2) கமுதி செல்லும்போது வழங்கப்பட்ட பாதுகாப்பு திரும்பி வரும்போது விலக்கப் பட்டது;

(3) அணி வகுத்து வந்த 18 வாகனங்களில் முதல் வாகனத்தைத் தவிர்த்துவிட்டு இரண்டாவது, மூன்றாவது, நான்காவது வாகனங்களை லாரி தாக்கியிருக்கிறது;

(4) லாரியை ஓட்டி வந்த நபரை விட்டுவிட்டு வேறு ஒரு நபரை லாரியை ஓட்டி வந்தவராகக் காட்டப்பட்டுள்ளது;

ஆக இந்த காரணங்களைக் கொண்டு இது விபத்து அல்ல என்றும், சதி என்றும் காவல் துறையினர் ஒத்துழைப்பும் இதற்கு உள்ளது என்றும் இந்த வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறார். இந்தக் காரணங்கள் எல்லாமே உண்மையானதாகவோ சதியைக் காட்டுவதாக எனக்குப் படவில்லை.

(21) வரிசையாக வந்த கார்களில் எந்தக்காரையும் லாரி குறி வைத்து மோதவில்லை என்பதை ஆர்.டபிள்யூ. 1, ஆர்.டபிள்யூ. 2-வின் சாட்சியமே காட்டுகிறது என்பதை மேலே கண்டோம். லாரி டிரைவர் செல்லுலர் போன் வைத்திருப்பவராக என் முன் தோற்ற மளிக்கவில்லை. கிளீனர் ஓட்டியதாகவும் சாட்சியமில்லை ''தேவர் ஜெயந்தி துக்க தினம்'' என்று சொல்லியதுபோல் நடந்துவிட்டது என்பது எதேச்சையாக நடந்ததுதான். லாரியை ஓட்டி வந்தவரை விபத்து நடந்தவுடன் லாரி சொந்தக்காரரும் அவர் மகனும் கண்டிருக்கின்றனர். தெப்பக்குளம் காவல் நிலையத்தில் அவர் சரணடைந்திருக்கிறார். எனவே, விபத்து நடந்தவுடன் அவர் வீட்டுக்குப் போய்த் தூங்கினார் என்பதும், காவல் துறையினர் அவரை வீட்டிலிருந்து கூட்டிப் போனார்கள் என்பதும் உண்மையைத் தெரியவில்லை.

(22) தேவர் ஜெயந்திக்கு முன்பாக இராமநாதபுரம் மாவட்டம் பகுதியில் சாதிக் கலவரம் நடந்தது. அதனால் தேவர் ஜெயந்தி விழாவும் குரு பூஜையும் எந்தவிதமான அசம்பாவிதமும் இன்றி நடக்க வேண்டும் என்பதற்கு காவல் துறையினர் மிகுந்த எச்சரிக்கை யுடன் அதிகமான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து இருந்தார்கள் என்பதை திரு வல்லரசு அவர்களே ஒப்புக் கொள்கிறார். அப்படி இருக்கும்பொழுது பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர்களுக்கு எதிராக காவல் துறை அதிகாரிகள் யாரும் செயல்படக் காரணம் இல்லை. எந்த அதிகாரிகள் அவர்களுக்கு விரோதமாக இருந்தார்கள் என்றும் சொல்லப்படவில்லை. திரு. வல்லரசு அவர்களே தனக்கு எந்த காவல் அதிகாரி மீதும் சந்தேகம் இல்லை என்று ஒப்புக் கொள்கிறார். எனவே, தலைவர்கள் வருவதை அறிந்து, அதை எதிர் கொண்டு, லாரியை விட்டு மோதியிருக்கிறார்கள் என்ற வாதம் அடிப்பட்டுப் போய்விடுகிறது. எதிர் தரப்பில் சொல்லப்படுவதைப் போல் சம்பவம் ஒரு சதி என்றால், அதன் விளைவுகள் மிகக் கடுமையாக இருக்கும் என்பது காவல்துறையினருக்குத் தெரிந்து இருக்கும். அந்த நிலையில் அவர்கள் சதி திட்டத்தில் பங்கு கொள்ள காரணமே இல்லை. தலைவர்கள் எந்த வழியில் வருகிறார்கள் என்பதை காவல்துறையினர் குறித்துக் கொண்டது ஒரு எச்சரிக்கை நடவடிக்கை தான். அதைத் தெரிந்த ஒருவர் தான் எதிரில் வந்து விபத்தை ஏற்படுத்த முடியும். அப்படி நடக்க வாய்ப்பே இல்லை என்பதை மேலே குறிப்பிட்ட சாட்சிகள் விளக்குகிறார்கள். முன் கூட்டியே திட்டமிட்ட சதி என்று சொல்வதானால் அது எப்பொழுது, எங்கே திட்டப்பட்டது என்று தெரியவேண்டும். அப்படி திட்டம் தீட்டப்பட்டதாக யாரும் சொல்ல முன்வரவில்லை. பொதுவாக ''சந்தேகம் இருக்கிறது, சந்தேகம் இருக்கிறது'' என்றுதான் கூறியிருக்கிறார்கள். அப்படி சந்தேகப்படுவதற்கு அவர்கள் சொல்லும் காரணம் எதுவும் உண்மையைத் தெரிய வில்லை. திரு. அய்யனன் அம்பலம் அவர்களுக்கு எதிரிகளே இல்லை என்றும், கடைசி வரையில் அவர் தனக்குப் பாதுகாப்பே வைத்துக் கொள்ளவில்லை என்றும், பாதுகாப்பு கேட்கவே இல்லை என்றும், திரு. அய்யனன் அம்பலம் அவர்களின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று தான் நினைக்கவே இல்லை என்றும் திரு வல்லரசு அவர்களே ஒப்புக் கொள்கிறார். இதை யெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கையில், சம்பவம் ஒரு சாலை விபத்துதான் என்பதில் ஐயப்படுவதற்கு ஒன்றுமில்லை. அது ''விபத்து போல நடத்தி முடிக்கப்பட்ட சதி'' என்ற கூற்றை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. விபத்தில் ஒரு நல்ல, நேர்மையான, உண்மையான, சமூகத் தொண்டரான, திரு அய்யனன் அம்பலம் அவர்கள் மரணமடைந்து தான் மிகவும் வருந்தத் தக்கது.

VII. முடிவுரை :

30—10—1998 அன்று மதுரையில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. அய்யனன் அம்பலம் அவர்களும் மற்றும் அக்கட்சியைத் சேர்ந்த அருப்புக் கோட்டை திரு. முத்துராமலிங்கம் அவர்களும், திரு. உசிலைராஜன் அவர்களும் மரணமடைந்த துடன் மற்றும் ஒன்பதின்மர்—மேற்குவங்க பாராளுமன்ற உறுப்பினர் திரு. தேப பிரத பிஸ்வாஸ், சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சந்தானம், திரு. வளையாபதி, திரு. சிங்காரஜி, திரு. ராஜு ஆண்டித் தேவர், திரு. சேவுகன், திரு. ரெங்காமி நாயடு, திரு. ஜீவானந்தம், திரு. சாந்தமூர்த்தி—காயமடைந்த சம்பவம் ஒரு சாலை விபத்துதான். அந்த விபத்து அன்று அதிகாலை 00-45 மணிக்கு மதுரை காமராசர் சாலையில், ''ஜெயலட்சுமி ஆர்ட்ஸ்'' என்ற கடை முன்பு நடந்திருக்கிறது. 29—10—1998 அன்று இரவு பகம்பொன்னில் திரு. முத்துராமலிங்கத் தேவரின்—தேவர் குருபூஜை மற்றும் பொதுக்கூட்டம் நடத்திவிட்டு, மேலே சொன்ன மரணமடைந்தவர்களும் காயமடைந்தவர்களும் மதுரைக்கு TN37B 6545 TN59E 2122 மற்றும் TN60 7747 என்ற அம்பாசிடர் கார்களில் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, மதுரை மோகன்ராஜன், மாதவன் என்பவர்களுக்குச் சொந்தமான ''அஜந்தா'' TN59Y 4176 என்ற அரைபாடி மணல் லாரி அதிவேகமாக வந்து அந்தக் கார்களின் மீது மோதியதால் அந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. விபத்தின்போது மேற்படி லாரியை ஓட்டுநர் சுப்பிரமணியன் என்பவர்தான் ஓட்டி வந்திருக்கிறார். விபத்துக்குச் சற்று முன்பு, ஜாவதநல்லூரிலிருந்து மதுரை பச்சரிசிக்காரத் தோப்பில் உள்ள ஹரிஹரன் என்ப வரின் வீட்டுக்கு மணல் கொண்டுபோய் கொட்டிவிட்டுத் திரும்பி லாரியை ஓட்டி வந்திருக்கிறார். அப்படி வந்த போது அதிவேகமாகவும் கவனக் குறைவாகவும் லாரியை ஓட்டி எதிரேவந்த கார்களின் மீது மோதி சுப்பிரமணியன்தான் அந்த விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அது முழுக்க முழுக்க ஒரு சாலை விபத்துதான். அதன்பின் சதி ஏதும் இருப்பதாகச் சொல்லுவது ஆதாரமற்றது.

மதுரை,
நாள் : 5-1-1999.

ம. அ. முருகேசன்,
ஆணையத் தலைவர்.

சாட்சிகளின் பட்டியல்.

I. காவல் துறை சாட்சிகள் :

(1) திரு. வீரணன், காவல் ஆய்வாளர்.
(2) திரு. சந்திரசேகரன், காவல் ஆய்வாளர்.
(3) திரு. மோகன்ராஜன்.
(4) திரு. சுப்பிரமணியன்.
(5) திரு. கணேசன்.
(6) திரு. கிருஷ்ணமூர்த்தி.
(7) திரு. ரமணன்.
(8) திரு. வளையாபதி.

II. எதிர்த்தரப்பு சாட்சிகள் :

(1) திரு. கர்ணன்.
(2) திரு. குன்றுமலை.
(3) திரு. யானைமலை.
(4) திரு. ஜீவானந்தம்.
(5) திரு. வல்லரசு, எம்.எல்.ஏ.

III. ஆணையத்தின் சாட்சி :

திரு. அமரநாதன், உதவி ஆணையர் (குற்றப் பிரிவு), மதுரை நகர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Exhibit number.	*Date.*	*Description of documents.*	*Marked by.*	*Remarks.*
(1)	(2)	(3)	(4)	(5)
Ex. A1	30—10—1998	FIR in Cr. No. 81/98 of Madurai Traffic I, Police Station.	P.W. 1	Xerox.
Ex. A2	30—10—1998	Observation mahazar for the scene of occurrence.	P.W. 1	Xerox.
Ex. A3	30—10—1998	Sketch for the scene of occurrence.	P.W. 1	Xerox.
Ex. A4	30—10—1998	Recovery mahazar for the glass Pieces around the vehicle on the scene of occurrence.	P.W. 1	Xerox.
Ex. A5	30—10—1998	Inquest report for the dead body of Usilai Rajan.	P.W. 1	Xerox.
Ex. A6	30—10—1998	Inquest report on the dead body of Muthuramalingam.	P.W. 1	Xerox.
Ex.A7	30—10—1998	Inquest report for the dead body of Ayyanan Ambalam.	P.W. 1	Xerox.
Ex. A8	30—10—1998	Mahazar for the seizure of clothes from the car TN59E 2122 and trip sheet for lorry TN59Y 4176 from the lorry.	P.W. 1	Xerox.
Ex. A9	02—11—1998	Inspection report of the Motor Vehicle Inspector for the cars TN60 7747 and for the lorry TN59Y 4176.	P.W. 1	Xerox.
Ex. A10	02—11—1998	Inspection report of the Motor Vehicle Inspector for the cars TN59E 2122 and TN 37B 6545.	P.W. 1	Xerox.
Ex. A11	30—10—1998	Postmortem certificate for the dead body of Ayyanan Ambalam.	P.W. 1	Xerox.
Ex. A12	30—10—1998	Postmortem certificate for the dead body of Muthuramalingam.	P.W. 1	Xerox.
Ex. A13	30—10—1998	Postmortem certificate for the dead body of Usilai Rajan.	P.W. 1	Xerox.
Ex. A14	30—11—1998	Affidavit of the Inspector Veerənan.	P.W. 1	Xerox.

Exhibit number.	Date.	Description of documents.	Marked by.	Remarks by.
(1)	(2)	(3)	(4)	(5)
Ex-A15	29—10—1998	Permit receipt given by one Ramasamy to take sand from the river for the lorry T.N. 59Y 4176 (தமிழ்).	P.W. 2	Xerox of Ex-A27
Ex.A16	07—11—1998	Statement of lorry T.N.59Y 4176 Driver Subramanian.	P.W. 2	True Copy.
Ex.A17	09—11—1998	Scientific report from the Forensic Science Laboratory, Madurai.	P.W. 2	Xerox.
Ex.A18	09—11—1998	Rough sketch by scientific Assistant for the scene of occurrence.	P.W. 2	Xerox.
Ex. A19	06—11—1998	Finger Print report	P.W. 2	Xerox.
Ex.A20	07—11—1998	Certificate issued by ophthalmologist Dr. Srinivasan about the vision of lorry Driver Subramanian.	P.W. 2	Xerox.
Ex.A21	12—11—1998	Wound certificate of Biswas issued by Dr. Ramesh Ardhanari.	P.W. 2	Xerox.
Ex.A22	12—11—1998	Wound certificate for Santhanam issued by Dr. Ramesh Ardhanari.	P.W. 2	Xerox.
Ex.A23	19—11—1998	Wound certificate for Valayapathi issued by Dr. Sathyanathan.	P.W. 2	Xerox.
Ex.A24	05—11—1998 06—11—1998	Photo Album contaning 53 Photos.	P.W. 2	Printed Photos.
Ex.A25	30—11—1998	Affidavit of Inspector Chandrasekaran.	P.W. 2	Original.
Ex.A26	23—11—1998	Inspection report of the motor vehicle Inspector about the condition of tyre and brake system in lorry T.N. 59Y 4176.	P.W. 2	Original.
Ex.A27	29—10—1998	Permit receipt given by one Ramasamy to take sand from the river for the lorry T.N.59Y 4176.	P.W. 3	Original of Ex.A15.
Ex.A28		Driving licence of Driver Subramanian.	P.W. 3	Xerox.
Ex.A29	04—12—1998	Affidavit of lorry partner Mohanrajan.	P.W. 3	Original.
Ex.A30	07—11—1998	Statement signed by Driver Subramanian recorded by the Inspector.	P.W. 4	Xerox.

Exhibit No.	Date.	Description of documents.	Marked by.	Remarks.
(1)	(2)	(3)	(4)	(5)
Ex.A31	04—12—1998	Affidavit of Driver Subramanian	P.W. 4	Original.
Ex.A32	04—12—1998	Affidavit of Loadman Ganesan	P.W. 5	Original.
Ex.A33	04—12—1998	Affidavit of building contractor Krishnamoorthy.	P.W. 6	Original.
Ex.A34	04—12—1998	Affidavit of Ramanan son of Poochi alias Andi Ambalam, Kallambal owner of another lorry No. T.N. 57 5544.	P.W. 7	Original.
Ex.A35	04—12—1998	Affidavit of lorry Owner Madhavan.		Original.
Ex.B1	29—11—1998	Affidavit of Karnan	R.W. 1	Original.
Ex.B2	29—11—1998	Affidavit of Kundumalai	R.W. 2	Original.
Ex.B3	29—11—1998	Affidavit of Yanaimalai	R.W. 3	Original.
Ex.B4	29—10—1998	Paper publication in Dinakaran Daily.	R.W. 5	Xerox.
Ex.B5	28—10—1998	Paper publication in Dinakaran Daily.	R.W. 5	Xerox.
Ex.B6	24—12—1998	Affidavit of P. N. Vallarasu	R.W. 5	Original.
Ex.B7	24—11—1998	Affidavit of L. Santhanam	..	Original.
Ex.B8	24—11—1998	Affidavit of C. Muthuramalingam	..	Original.
Ex.B9	24—11—1998	Affidavit of Sevugan	..	Original.
Ex.B10	24—11—1998	Affidavit of Raj Andi Thevar	..	Original.
Ex.B11	24—11—1998	Affidavit of Rengasamy	..	Original.
Ex.B12	24—11—1998	Affidavit of Ammavasai	..	Original.
Ex.B13	24—11—1998	Affidavit of Muthuramalingam, Driver	..	Original.
Ex.B14	24—11—1998	Affidavit of Singaraj	..	Original.
Ex.B15	24—11—1998	Affidavit of Rajarathinam	..	Original.
Ex.C1	31—12—1998	Tamizhan Express Nov. 1998, dated 11—17.	Commission	Original.
Ex.C2	31—12—1998	Netrikkan Tamil Weekly, dated 13th November 1998.	Commission	Original.
Ex.C3	31—12—1998	Discharge Summary of Singarajan.	Commission	Original.
Ex.C4	31—12—1998	A. R. relating to Singarajan	Commission.	Xerox.

Exhibit No.	Date.	Description of documents.	Marked by.	Remarks.
(1)	(2)	(3)	(4)	(5)
Ex.C5	31—12—1998	Discharge Summary of Raju Andi Thevar.	Commission	Original.
Ex.C6	31—12—1998	A. R. relating to Raju Andi Thevar.	Commission	Xerox.
Ex.C7	31—12—1998	Discharge Summary of Sevugan.	Commission	Original.
Ex.C8	31—12—1998	A. R. relating to Sevugan	Commission	Xerox.
Ex.C9	31—12—1998	Discharge Summary of Rengasamy Naidu.	Commission	Original.
Ex.C10	31—12—1998	A. R. relating to Rengasamy Naidu	Commission	Xerox.
Ex.C11	31—12—1998	Discharge Summary of Geevanantham.	Commission	Original.
Ex.C12	31—12—1998	A. R. relating to Geevanantham	Commission	Xerox.
Ex.C13	31—12—1998	Discharge Summary of Santhamoorthy.	Commission	Original.
Ex.C14	31—12—1998	A. R. relating to Santhamoorthy.	Commission	Xerox.
Ex.C15	31—12—1998	Discharge Summary, A. R. Wound Certificate relating to Depa Pradha Biswas, M.P.	Commission	Xerox 3 copies.
Ex.C16	31—12—1998	Discharge Summary, A.R. Wound Certificate relating to L. Santhanam, M.L.A.	Commission	Xerox 3 copies.
Ex.C17	31—12—1998	Discharge Summary, A. R. Wound Certificate relating to Valayapathy (Driver).	Commission	Xerox
Ex.C18	31—12—1998	Anonymous letter addressed to Chairman.	Commission	Original.
Ex.C19	31—12—1998	Letter from Thevar Peravai Kallambal.	Commission	Original.
Ex.C20	31—12—1998	Article on the death of Ayyanan Ambalam published in Tamil Weekly Netrikkan, dated 13th November 1998 received anonymously.	Commission	Original.
Ex.C21	31—12—1998	Anonymous letter addressed to Chairman.	Commission	Original.
Ex.C22	31—12—1998	Letter addressed to the Chairman by P. Ramadas, Thirumangalam.	Commission	Original.
Ex.C23	31—12—1998	Copy of Arrest Card relating to Subramanian.	Commission	Certified Copy.

Exhibit No.	Date.	Description of documents.	Marked by.	Remarks.
(1)	(2)	(3)	(4)	(5)
Ex.C24	31—12—1998	Extract of P.S.R. relating to Subramanian.	Commission	Xerox.
Ex.C25	31—12—1998	Remand Report relating to Subramanian.	Commission	Carbon Copy.
Ex C26	31—12—1998	Narrative Report of the speach of the leaders delivered on 29th October 1998 at Pasumpon compiled by Special Branch.	Commission	Xerox.
Ex.C27	31—12—1998	Notes of inspection, dated 16th November 1998.	Commission	Original.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

© தமிழ்நாடு அரசு 1999

பொதுத் (மிகக் கமுக்கம்) துறை.

அரசாணை எண் எஸ். எஸ். 2/76-2/99, நாள்: 1-3-1999.

விசாரணை ஆணையம்—விசாரணை ஆணையங்கள் சட்டம், 1952 (மத்திய சட்டம் 60/1952)-ன்கீழ் 30—10—1998 அன்று மதுரையில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. அய்யணன் அம்பலம் மற்றும் இருவர் மரணமடைந்ததுடன் ஒன்பது நபர்கள் காயமடைந்த சம்பவம் குறித்து விசாரணை செய்வதற்காக விசாரணை ஆணையமாக நியமிக்கப் பட்ட ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. ம. அ. முருகேசன் அளித்த விசாரணை ஆணையத்தின் அறிக்கை —முடிவுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

படிக்கவும் :—

அரசாணை எண் எம்.எஸ். 1833, பொதுத் (சட்டம்-ஒழுங்கு-எஃப்) துறை, நாள் : 6—11—1998.

ஆணை—எண் எஸ்.எஸ்.2/76-2/99, பொதுத்(மிகக் கமுக்கம்) துறை, நாள் : 1—3—1999.

மேற்சொன்ன அரசாணையில், மதுரையில் 30—10—1998 அன்று அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. அய்யணன் அம்பலம் மற்றும் இருவர் மரணமடைந்த துடன் ஒன்பது நபர்கள் காயமடைந்த சம்பவம் குறித்து விசாரணை செய்வதற்காக, 1952ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) கீழ் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. ம. அ. முருகேசன் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு நபர் விசாரணை ஆணையம் நியமிக்கப்பட்டது. விசாரணை ஆணையத்தின் ஆய்வு வரம்பு பின் வருமாறு :—

ஆய்வு வரம்பு :

30—10—1998 அன்று மதுரையில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. அய்யணன் அம்பலம் மற்றும் இருவர் மரணமடைந்ததுடன் ஒன்பது நபர்கள் காய மடைந்த சம்பவத்திற்கான காரணம் மற்றும் சூழ்நிலைகள் பற்றி விசாரணை செய்தல்;

2. விசாரணை ஆணையம் விசாரணை நடவடிக்கைக் குறிப்புகளில் பதிவு செய்யப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவணச் சாட்சியங்களைக் கவனமுடன் பரிசீலனை செய்து (14 சாட்சிகள், 77 ஆவணங்கள்) ஆய்வு வரம்பு குறித்து பின்வருமாறு தன் முடிவுகளை தெரிவித்துள்ளது:—

முடிவுகள் :

30—10—1998 அன்று மதுரையில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. அய்யணன் அம்பலம் அவர்களும் மற்றும் அக்கட்சியைச் சேர்ந்த அருப்புக்கோட்டை திரு. முத்துராமலிங்கம் அவர்களும், திரு. உசிலைராஜன் அவர்களும் மரணமடைந்ததுடன் மற்றும் ஒன்பதின்மர்—மேற்கு வங்க பாராளுமன்ற உறுப்பினர் திரு. தேப பிரத பிஸ்வாஸ், சோழ வந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சந்தானம், திரு. வளையாபதி, திரு. சிங்கராஜ், திரு. ராஜு ஆண்டித்தேவர், திரு. சேவுகன், திரு. செங்கசாமி நாயுடு, திரு. ஜீவானந்தம், திரு. சாந்தமூர்த்தி—காயமடைந்த சம்பவம் ஒரு சாலை விபத்துதான், அந்த விபத்து அன்று

அதிகாலை 00-45 மணிக்கு மதுரை காமராசர் சாலையில், 'ஜெயலட்சுமி ஆர்ட்ஸ்' என்ற கடை முன்பு நடந்திருக்கிறது. 29—10—1998 அன்று இரவு பசும்பொன்னில் திரு. முத்து ராமலிங்கத் தேவரின்—தேவர் குருபூஜை மற்றும் பொதுக்கூட்டம் நடத்திவிட்டு, மேலே சொன்ன மரணமடைந்தவர்களும் காயமடைந்தவர்களும் மதுரைக்கு டி.என். 37 பி 6545, டி.என். 59 இ 2122 மற்றும் டி.என். 60 7747 என்ற அம்பாசிடர் கார்களில் திரும்பி வந்துகொண் டிருந்தபோது, மதுரை மோகன்ராஜன், மாதவன் என்பவர்களுக்குச் சொந்தமான ''அஜந்தா'' டி.என். 59 ஒய். 4176 என்ற அரைபாடி மணல் லாரி அதிவேகமாக வந்து அந்தக் கார்களின் மீது மோதியதால் அந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. விபத்தின்போது மேற்படி லாரியை ஓட்டுநர் சுப்பிரமணியன் என்பவர்தான் ஓட்டி வந்திருக்கிறார். விபத்துக்குச் சற்று முன்பு ஜராவதநல்லூரிலிருந்து மதுரை பச்சரிசிக்காரத் தோப்பில் உள்ள ஹரிஹரன் என்பவரின் வீட்டுக்கு மணல் கொண்டுபோய் கொட்டிவிட்டுத் திரும்பி லாரியை ஓட்டி வந்திருக்கிறார். அப்படி வந்தபோது அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் லாரியை ஓட்டி எதிரே வந்த கார்களின்மீது மோதி சுப்பிரமணியன்தான் அந்த விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இது முழுக்க முழுக்க ஒரு சாலை விபத்துதான். அதன்பின் சதி ஏதும் இருப்பதாகச் சொல்லுவது ஆதாரமற்றது என விசாரணை ஆணையம் முடிவு செய்துள்ளது.

3. விசாரணை ஆணையத்தின் முடிவை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

(ஆளுநர் அவர்களின் ஆணைப்படி)

ஏ.பி. முத்துசாமி,
தலைமைச் செயலாளர்.

பெறுநர்:

செயலாளர், பொதுத் (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறை, சென்னை-9.

செயலாளர், உள் துறை, சென்னை-9.

ஆளுநர் அவர்களின் செயலாளர், சென்னை-9.

மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை.

காவல் துறை இயக்குநர், சென்னை-4.

காவல் துறைத் தலைவர், புலனாய்வு, சென்னை-4.

காவல் துறை ஆணையாளர், மதுரை நகரம்,

மத்திய அரசுச் செயலாளர், உள்விவகாரம், புதுடில்லி.

முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



அரசு மைய அச்சகம், சென்னை-600 079.